Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-16

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-11 | 27-09-2004 | திங்கட்கிழமை | ஓசை -222








தியாகி லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவிப்பதை மேலுள்ள படங்களில் காணலாம்.

# தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் பங்கேற்பு

## நல்லூரில் நினைவுக்கல் திரைநீக்கம்

(கிளிநொச்சி)

**தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் பங்கேற்று தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். நல்லூரில் தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து வீரச்சாவடைந்த இடத்தில் நினைவுக் கல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.**

15ஆம் திகதி முதல் 12 நாட்களாக தியாகி திலீபன் நினைவு நாட்கள் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளன. இறுதிநாளான நேற்றுக்காலை பொதுச்சுடரேற்றி, தேசியக்கொடியேற்றலுடன் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் ஆரம்பமாகின. தியாகி திலீபன் வீரச்சாவடைந்த 10.48 மணிக்கு ஒரு நிமிடம் மணி ஒலிக்க மக்கள் எழுந்துநின்று அகவணக்கம் செலுத்தினர்.

மாலை பிரதேச ரீதியாக சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உரைகள்,கலை நிகழ்வுகள் என்பன

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பலஸ்தீன அரசியல் நிபுணர்கள் குழு நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

பலஸ்தீன நாட்டின் அரசியல் நிபுணர் குழு ஒன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் அரசியல் மற்றும் இராணுவப் பாதுகாப்பு நிலவரங்கள், சமாதான காலத்தில் யாழ்.குடா நாட்டு மக்களின் வாழ்வு என்பன குறித்து ஆராய்வதற்காக விஜயம் செய்த பலஸ்தீனத்தின் பன்னாட்டு அரசியல் விவகாரக்குழுவின் அரசியல் நிபுணர் பஹேல்லே தலைமையிலான குழுவினர். இராணுவத் தரப்பினர் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

**ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சையின் சிறந்த பெறுபேறுகள் 2-ஆம் பக்கத்தில் பார்க்க.**

## சமாதானத்திற்குத் தடையாக இருப்பது அரசாங்கத்துள் இருக்கும் உட்பூசலே

**ஐ.தே.க.பா.உ. ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு**

இலங்கையில் சமாதானத்திற்குத் தடையாக இருப்பது அரசாங்கத்துள் இருக்கும் உட்பூசல்கள் தான் என ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் பி.பி.சி க்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்: ஒன்றுக்கொன்று முற்று முழுதாக முரண்பாடான கருத்துக்கள் அரசாங்கத்துக்குள்ளேயே இருக்கின்றன.

சனாதிபதி சில சமயங்களில், தான் விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வற்றாப்பளை சூரிபுரத்தில் மாலைநேரக் கல்விமண்டபம் கேணல் சங்கர் நினைவாகத் திறப்பு

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளையிலுள்ள சூரிபுரம் கிராமத்தில் அரசியல்துறை ஊரக வளர்ச்சிப் பணியினரால் கேணல் சங்கர் அவர்களின் நினைவாக மாலை நேரக்கல்வி மண்டபம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத்தை கேணல் சங்கரின் மனைவி திருமதி குகா அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் ஏற்றி வைத்தார். தேசியக்கொடியினை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். பெயர்ப்பலகை தமிழீழ

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல எம் உரிமைகளைப் பெறத்துடிக்கும் மக்கள் அமைப்பு

**கனடா பொங்குதமிழ் நிகழ்வுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கிய செய்தியில்**

நீங்கள் கனடா உட்பட உலக அரசுகளுக்கெல்லாம் ஒரு செய்தியைச் சொல்லுங்கள். நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல. சொந்த மண்ணிலே, சொந்தக் காலிலே நின்று போரிட்டு எம் உரிமைகளைப் பெறத்துடித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் விடுதலை அமைப்பு என்ற உண்மையைச் சொல்லுங்கள் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் கனடா ரொரன்ரோவில் நேற்று முன்தினம நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்குத் வழங்கிய செய்தியில் தெரிவித்தார். அவர் மேலும் தொவிக்கையில்; எங்கள் நிலையை நீங்கள் அடித்துச்சொல்லியிருக்கிறீர்கள். உலகத்தின் செவிப்பறைகளில் இது ஓங்கி ஒலிக்கும் என்பதில் நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளோம். சனநாயக மண்ணிலே வாழ்கின்ற

(15 ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம்(இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P.021-2285750 (சி-10350)

### கருத்தரங்கு

0/L மாணவர்களுக்கான விஞ்ஞான பாடக் கருத்தரங்கு நடைபெற உள்ளது. காலம்:- 28.09.2004, (செவ்வாய்) காலை10 மணிக்கு. இடம்:- கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், கிளிநொச்சி. ஆசிரியர்:- கேசவன். (சி-10420)

### தவறிவிட்டது

முருகேசு ராஜ்குமார் (P.H.I) ஆகிய எனது சில முக்கிய ஆவணங்களும் உடுப்புகளும் அடங்கிய கறுப்பு நிற பேக் ஒன்று 22.09.2004 அன்று கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப் புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.(4696)

### விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புப் கொண்ட மேட்டுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு

024 4589416
077 6321271
077 6145316 (சி-10419)

## மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மாகாணத்தில் நடாத்தப் பெற்ற 2004 ஆம் ஆண்டிற்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர் தொகையும், மாவட்ட வெட்டுப் புள்ளியும் கீழ்வருமாறு :-

| மாவட்டம் | வெட்டுப் புள்ளி | சித்திபெற்றோர் தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 124 | 898 |
| கிளிநொச்சி | 124 | 55 |
| மன்னார் | 126 | 75 |
| வவுனியா | 127 | 175 |
| முல்லைத்தீவு | 124 | 53 |
| மட்டக்களப்பு | 128 | 510 |
| அம்பாறை | 126 | 421 |
| திருகோணமலை | 125 | 422 |

(சோ.கு)

## -புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்-

# கிளி.யில் இருமாணவர்களுக்கு அதிகூடிய புள்ளிகள்

# முல்லையில் மாணவி முதலிடம் பெற்றார்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களுடைய 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளிவந்துள்ளன.

கிளி.முல்லை மாவட்டங்களில் மாவட்ட ரீதியில் சிறப்புப்புள்ளிகள் பெற்ற முதல் மூன்று மாணவர்களினதும், பாடசாலைகளினதும் பெயர் விபரம் பின்வருமாறு:-

**கிளிநொச்சி மாவட்டம்**

ச.பானுப்பிரியன், கிளிநொச்சி மகாவித்தியாலயம், நா.சுடர்வண்ணன் திருவையாறு மகாவித்தியாலயம் ஆகிய இருவரும் 160 புள்ளிகளினைப்பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்தினையும், சி.மகீசா- ஜெயபுரம் அ.த.க. பாடசாலை மாணவி- 155 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

**முல்லைமாவட்டம்**

செ.சுபரஞ்சினி- புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாசாலை,மாணவி-153புள்ளியி னைப் பெற்றுமாவட்ட ரீதியில் முதலாமிடத்தினையும், சி.ஜனுசன்- முள்ளியவளை அ.த.க.பாடசாலை மாணவன் 149 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தினையும், சி.ஆதவன் கொக்குளாய் அ.த.க. பாடசாலை மாணவன், 145 புள்ளிகளைப்பெற்று மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளனர்.

**பளைக் கோட்டம்**

பளை மத்திய கல்லூரி- நவரத்தினசாமி-சிவதாஸ் -126, சிதம்பரநாதன்-கவிநாத்-124, சிற்றம்பலம்-கீர்த்தனா-141, இந்திரகுமார்-ஜிலானி-145,

**கண்டாவளை**

கண்டாவளை ம.வி.-கனகராசா சஞ்சீவன்- 135, கலவை நாகேஸ்வரா-சிவராசா அபிலாஸ்-124, முருகானந்தா ம.வி - லோகிதன்-லோகேந்திரன் -132, தெய்வேந்திரலிங்கம் சிந்துஷா -124, இரா.கிழக்கு- புஸ்பராசா தர்சன் -136, பரந்தன் இந்து- பாலகுமார் அச்செயன் -125, பிரமந்தனாறு ம.வி- சிவசுப்பரமணியம் திரிபுரன் -134,

**பூநகரிக் கோட்டம்**

முழங்காவில் ம.வி-கருணாகரன் லோகிதன்-141, நவரத்தினசிங்கம் பவகீர்த்திதன்-131, சதீஸ்சாந்தன் அனோசன்-129,சிவராசா தாரணி-149, நற்குணநாதன் ஜெனூசா- 129, சிறிவிக்கினேஸ்வரா- ஈஸ்வரநாதன் சிவசக்திகா- 133, ஜெயபுரம்- சிவஞானமூர்த்தி துளசிகன்- 133. சிவஞானம் மகீசா -155, பூநகரிக் கல்லூரி- கணேஸ் பரநாதன் அனித்தா -126, பூநகரி ம.வி- சுந்தரலிங்கம் சுகன்யா-132, சுரேஸ்லிங்கம் சுதர்சினி-137.

**கரைச்சிக் கோட்டம.**

உருத்திரபுரம் ம.வி.- கதிரவேலு மகேந்திரன் கிருத்திகா -138, கனகபுரம் ம.வி. -மதுரநாயகம் அஜித்ஜெறோம் -131, குமார் கீர்த்தனன் -142, கிளிநொச்சி ம.வி சந்திரசேகரம் பானுப்பிரியன் -160, ஜோகலிங்கம் தேசிகன் -143, செல்வநாதன் கௌசிகா -143, ஆறுமுகம் மதுரான்சினி -143, கந்தசாமி அபர்னா -134, மதுசேனன் றோயினி -133, மத்தியகல்லூரி செல்வரத்தினம் வினோபாஜி -150, திருஞான சம்பந்த மூர்த்தி கௌசி -125, இந்து ஆரம்ப வித்தியாலயம் தவனேசன் சுகன்யா, -132, நிர்மல ஜீவா நிருஷிகா -124, முத்துலிங்கம் டினோசன் - 130, சிவநகர் அ.த.க நகுலதீபன் ஆறுமுகம் -138, துரைசிங்கம் ஜெயராஜ் -127, ஜெனிகா நீக்கிலாஸ் -125, மீனுஷா பிறேமபாலன் -128, இராமநாதபுரம் மேற்கு யசோதரன் கார்த்திகன் -150, ஸ்கந்தபுரம் இல1 அ.த.க மகேந்திரன் கலையமிர்தனா -137, இராமநாதபுரம் ம.வி- கணேசலிங்கம் லகிந்தன் -125, புனிததிரேசா- செல்வராசா ஸ்ரீபன்- -125, இராசேந்திரம் சர்மினி -126 நவரத்தினம் ஜெனார்த்தினி -126, பரராசசேகரம் கீர்த்தனா -127, உதயராஜ் சத்தியாங்கினி -133, சச்சுதன் எழில் நிலா -140, திருவையாறு ம.வி- நாகேஸ்வரன் சுடர் வண்ணன் -160, கணேஸ்வரன் நிசான் -143, முருகதாஸ் நிசாந்தினி -127, சரவணானந்தன் ஜெயமதி -127, சொர்ணநாதன் கோபிகா -125, கருணானந்தன் தர்னிகா -130.

(சோ,கு)

## இரு இளைஞர் கைது

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் நண்பகல் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களிடமிருந்து போலித்தேசிய அடையாள அட்டைகளும் இவர்களின் பயணப் பொதிக்குள் உள்ளூர்த்துப்பாக்கி ரவைகள் சிலவும் கண்டெடுக்கப் பட்டதாக பொலிசார் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## தியாகி திலீபன் நினைவு நாளை முன்னிட்டு

# மாவீரர் குடும்பங்களுக்கு வீடு வழங்கல்

தியாகி லெப்-கேணல் திலீபன் அவர்களின்17ஆம்ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு அரசடிப் பகுதியில் 05 மாவீரர் குடும்பங்களுக்கு நிரந்தரக் காணி வழங்கப்பட்டதுடன், வீடும், அமைத்துக் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், கிளிநொச்சி மாவட்ட மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர்ஆ.முகுந்தன், சமுதாய முன்னேற்ற நிலைய நிறுவனத்தின் பணிப்பாளர் ஐங்கரன், காப்பகத்தைச் சேர்ந்த மா.விஜிகரன், கடற்புலிகளின் துணைத்தளபதி மங்களேஸ், கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழேந்தி வடமராட்சிக் கிழக்கு கல்விக் கழகத்தினைச் சேர்ந்த தாயகன் மற்றும் அரச அரசார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்தோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வு நேற்று பி.பகல் 3.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் செ.சிறிராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

(கிளி. காப்பகம்)

## ஐந்து அமைச்சுகளின் பொறுப்புகள் மாற்றம்

சனாதிபதியினால் ஐந்து அமைச்சுக்களின் பொறுப்புகள் மாற்றம் பெற்றுள்ளன. கடந்த 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் மூலம் இந்த பொறுப்பு மாற்றங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் படி நிதி அமைச்சுடன் நிதிக் கொள்கை,தேசிய பொருளாதார கொள்கை உட்பட்ட ஏழு அம்சங்கள் சோக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பு துறைஅமைச்சுடன் தேசிய நல்லிணக்கம் என்ற விடயமும் சோக்கப்பட்டுள்ளது. மகாவலி மற்றும் ஆற்றுப்படுகை அமைச்சுடன் வடமத்திய பிரதேச அபிவிருத்திதுறையும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்து கலாசார அமைச்சுக்குள் இதுவரை காலமும் இருந்ததைக் காட்டிலும் கணினி பயிற்சித்துறை சேர்க்கப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தித்துறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. நகர சபை அமைச் சின் கீழ் மாலபே அபிவிருத்தித் திட்டம் சேர்க்கப் பட்டுள்ளது. (32)


## புதிய பணிமனை திறப்பு விழா

யாழ்.சாலை,பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள வட பிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிமனை திறப்பு விழா எதிர்வரும் 2004.10.02 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வைபவ ரீதியாக நடைபெறவுள்ளது. சங்கத்தில் உறுப்புரிமை பெற்ற உரிமையாளர்கள்,சாரதிகள்,நடத்துனர்கள் அனைவரையும் தவறாது இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர் சபை,
பணியாளர்கள்,
வ.பி.பா.உ.கூ.சங்கம்.

(சி-10438)

## 06ஆம் ஆண்டு நினைவலைகள்



02 ஆம் லெப். ஆதித்தா
சிவானந்தராசா நவந்தினி
ஸ்கந்தபுரம் கிளிநொச்சி

சம்பவம்:-
1998 - 09 - 27 ஓயாத அலைகள் -02
கிளிநொச்சி மீட்புச் சமரில் வீரச்சாவடைந்தார்.

குடும்பத்தினர்.

(3803)

## கிளி. நகரில்...

### ஊர்தி உரிமையாளர்களின் கனவு நனவாகிறது...

விபரம்- 12ஆம் பக்கத்தில்....

(சி-10413)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
18 - 04 - 1974



தாயக மண்ணில்
29 - 07 - 1998

### லெப்கேணல் ஜனா

(மாஸ்ரர்/காந்தசீலன்)

நடேசன் ஜெயந்தன்
சாவகச்சேரி

தலைவன் வழிசென்று
பல களங்கள் கண்ட வேங்கையே
ஓயாத அலைகள் இரண்டில்
கிளி நகர் மண்ணில் முத்தமிட்ட
எம் வீர மைந்தனே
என்றும் உன் வழியில் நாமும்

இவருடன் எமது உறவுகளான 2 ஆம் லெப் ஜனகா, கப்டன் ஈழவன் மற்றும் அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

உங்கள் நினைவுடன்
உறவுகள்

இல:282
3ஆம் யுனிற், மல்லாவி.

(5125)

# அணுவாயுத சோதனையை தடை செய்யும்
# சிடி.பிடி ஒப்பந்தத்துக்கு 40 நாடுகள் ஆதரவு

(நியூயோர்க்)

**அனைத்துவித அணுவாயுத சோதனைகளையும் தடை செய்ய வழிவகுக்கும் (சிடி.பிடி) ஒப்பந்தத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கு மாறு அமெரிக்கா மற்றும் பிற நாடுகளை 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளன.**

ஜப்பானின் முக்கிய தீவுகளைச் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைச் சோதனை முயற்சிக்கு வடகொரியா தயாராகி வருவதாக உளவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன என்று ஜப்பான் கூறியது. ஈரானும் அணு வாயுத சோதனைக்கு முயன்று வருவதாகக் கூறப்படுகிறது. இதை அடுத்து சிடி.பிடி ஒப்பந்தத்தை விரைந்து அமுற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து ஆதரவு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

அணுவாயுதங்களால் ஏற்படக் கூடிய பேரழிவு குறித்த பயம் உலகளவில் வலுவாகவுள்ளது என்று பின்லாந்து அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கூறியுள்ளன.

அணுச்சோதனை தற்காலிக செயல் நிறுத்த ஒப்பந்தத்தை 1992 முதல் அமெரிக்கா கடைப்பிடித்து வருகிறது. இருப்பினும் இந்த ஒப்பந்தத்துக்கு அதிகார பூர்வமாக ஒப்புதல் அளிக்கவில்லை.

இந்த ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் புஷ் எதிர்ப்பதாக வோஷிங்டனில் பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தில் 172 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. 115 நாடுகள் செயல் வடிவம் கொடுத்துள்ளன. ஜெனீவாவில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் சிடி.பிடி ஒப்பந்தம் வரைவு செய்யப்பட்டது. இதை 1996 இல் ஐ.நா பொதுச் சபை ஏற்றுக்கொண்டது.



பிரிஸ்பேனில் வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள லிபரல், தேசியக் கட்சிகளின் கூட்டம் நடக்கும் இடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்துவோரும், கூட்டத்தில் கலந்து கொண்ட அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட்டுடன் கைகுலுக்கும் துணைப்பிரதமர் ஜோன் அண்டர்சனும்.

# ஐக்கிய நாடுகள் சபையில் ஜப்பானை நிரந்தர உறுப்பு நாடாக்க அமெரிக்கா ஆதரவு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் ஜப்பானை நிரந்தர உறுப்பு நாடாக்க அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக் கவுன்சிலில் தங்களை நிரந்தர உறுப்பினராக்க இந்தியா, பிரேசில், ஜேர்மனி ஆகிய நாடுகள் கோரிவருகின்றன. ஆனால் ஜப்பானை மட்டும் நிரந்தர உறுப்பினராக்க அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் தெரிவிக்கையில்,

ஜப்பானை பாதுகாப்புக்கவுன்சிலில் சேர்ப்பதற்கு ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளோம். மற்ற நாடுகளைப் பொறுத்தவரை ஐ.நா அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்வது பற்றி ஆராய்ந்து வரும் குழு தனது அறிக்கையை அளிக்கும் வரை காத்திருப்பதே சிறந்த வழியாகும்.

அந்த அறிக்கையை ஐ.நா. பொதுச்செயலர் கொபிஅனான் முதலில் படிக்க வேண்டும். அதன் பின் உறுப்புநாடுகளின் பார்வைக்கு அந்த அறிக்கை வழங்கப்படும்.

ஐ.நாவின் அமைப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து மறுஆய்வு செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. அதன்துணை அமைப்புக்களின் பணிகுறித்தும் ஆராய வேண்டும்.

50 ஆண்டுகால அனுபவத்திற்குப் பிறகு ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலின் செயற்பாடுகள் பற்றி முக்கியமாக ஆராய வேண்டும். ஐ.நா தொடங்கும் போது 51நாடுகள் தான் இருந்தன. தற்போது இந்த எண்ணிக்கை 191ஆக உயர்ந்துவிட்டது.

எனவே, பாதுகாப்புக் கவுன்சிலை மறுசீரமைப்பது குறித்து அறிக்கையில் ஏதாவது கூறப்பட்டிருந்தால், அதைக் கவனமாகப் பரிசீலிப்போம். மற்ற அமைப்புக்களை மாற்றியமைப்பது குறித்தும் ஆராய்வோம்.

தற்போதைய நிலையில் பாதுகாப்புக் கவுன்சிலில் எந்தெந்த நாடுகளைச் சேர்ப்பது அல்லது சேர்க்கக் கூடாது என்று புதிதாக எதையும் சொல்வதற்கில்லை என்றார் பவல்.



காபூலுக்கு 70 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சார்.ஜகர் எனுமிடத்தில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது துண்டுப் பிரசுரத்துடன் காணப்படும் ஆப்கான் சனாதிபதி வேட்பாளர் மொகமட் யுனுஸ் குவனனியின் ஆதரவாளர்கள்.

# அமெரிக்காவில் வீசிவரும் புயலினால் 17 இலட்சம் கட்டடங்கள் சேதமடையலாம்?

அமெரிக்கா புளோரிடாவில் வீசிவரும் புயலினால் 17 இலட்சம் கட்டடங்கள் சேதமடையலாமென்றும், 1இலட்சத்து 42 ஆயிரம் மக்கள் வீடுகளை இழக்கக்கூடும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறி யுள்ளனர்.

இந்தப் புயல் மணிக்கு 185 கிலோமீற்றர் வேகத்தில் வீசி வருவதனால் கடலில் மூன்று மீற்றர் உயரத்திற்குக் கடலலைகள் எழுந்துள்ளன. புளோரிடாவில் மொத்தம் ஒரு கோடி 70 இலட்சம் மக்கள் வாழுகின்றனர்.இதில் 47 இலட்சம் மக்கள் புயற்காற்று அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# ரஷ்ய சனாதிபதி புட்டின் டிசம்பரில் இந்தியா செல்வார்

(நியூயோர்க்)

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் டிசம்பரில் இந்தியா வரவிருக்கிறார்.

புட்டினின் வருகை குறித்து நியூயோர்க்கில் இந்திய வெளியுறவுத்துறையமைச்சர் நட்வர்சிங்கும் ரஷிய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கி லாவ்ரோவும் புதன் கிழமை விவாதித்தனர்.

ரஷியப் பள்ளியொன்றில் பள்ளிக்குழந்தைகள் உட்பட 335 பேர் கொல்லப்பட்டதற்கு நட்வர் சிங் இரங்கல் தெரிவித்துக் கொண்டார். ஐக்கிய நாடுகள் சபையின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவில் இருநாடுகளும் இணைந்து பணியாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தியா-பாகிஸ்தான் உறவு, ஐக்கிய நாடுகள் சபையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் ஆகியவை பற்றியும் இருவரும் விவாதித்தனர்.

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினராக இருக்கும் அங்கோலாவின் வெளியுறவுத்துறை அமைச்சரையும் நட்வர்சிங் சந்தித்தார். இரு நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது பற்றி அப்போது விவாதிக்கப்பட்டது.

# தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் பலூஜாவில் 8பேர் பலி; 15பேர் படுகாயம்

(பலூஜா)

ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் 8பேர் பலியானதுடன் 15பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர். சனிக்கிழமை இச்சம்பவம் நடந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் கூறின.

ஜோர்தானைச் சேர்ந்த அபு முசாப் அல்-ஜர்காவி தலைமையிலான குழுவினர் பலூஜா நகரில் மத்திய பகுதியில் முக்கிய ஆலோசனைக்காகக் கூடியிருந்தனர். அமெரிக்கப்படைகள் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்தும் திட்டத்தை இறுதிசெய்யவே இக்கூட்டம் நடந்ததாகவும், இதையடுத்து அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடத்தியதாகவும், இராணுவப் பத்திரிகைக்குறிப்பு தெரிவிக்கிறது. சாலையில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த ஆங்காங்கே தடைகளையும் தீவிரவாதிகள் நிறுவியிருந்தனர்.

வெள்ளிக்கிழமை இவற்றின் மீதும் அமெரிக்கப்படைகள் குண்டு வீசின. சனிக்கிழமை நடந்த தாக்குதலில் இரு கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிணைக்கைதி கொலை பிரிட்டன் அரசு மறுப்பு

பிணைக்கைதியாகவுள்ள பிரிட்டன் நாட்டவர் கென்னத் ஹக்லி ஈராக் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார் என இஸ்லாமிய இணையதளம் அலிஸா தெரிவித்துள்ளது. இதுபற்றிய ஒளிநாடா விரைவில் வெளியிடப்படும் என அது கூறியுள்ளது.

ஆனால் இச்செய்தியை பிரிட்டிஷ் அரசு மறுத்துள்ளது. 'அலிஸா' என்ற பெயரில் இணையத்தளம் இருப்பது தெரியும். அது நம்பகரமான இணையதளம் அல்ல. இச்செய்திக்கு இப்போது முக்கியத்துவம் தர வேண்டியதில்லை என பிரிட்டிஷ் அரசின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

# பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் இருந்து ஈராக் நீக்கம்

-புஷ் அறிவிப்பு

ஈராக்கில் இருந்து சதாம்ஹுசைன் வெளியேற்றப்பட்டதையடுத்து பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து ஈராக்கை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் நீக்கியுள்ளார்.

ஈராக் அரசின் தலைமையும் கொள்கைகளும் மாறிவிட்டன. சர்வதேச பயங்கரவாதத்திற்கு அந்நாட்டு அரசு ஆதரவு அளிக்காது. அந்நாட்டு அரசாங்கமும் அதற்கான உறுதியை அளித்துள்ளது என்று புஷ் கூறியிருக்கிறார். 1990இல் ஈராக் முதன் முறையாக அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றது. ஈராக்கைத் தவிர தற்போது அந்தப் பட்டியலில் வடகொரியா, சூடான், சிரியா, ஈரான், கியூபா, லிபியா ஆகிய நாடுகளும் உள்ளன.


# அமெரிக்க இராணுவத்தினரை வழியனுப்பிவைக்கும் புஷ்



ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரையும், மற்ற வெளிநாட்டினரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்று தலை துண்டித்துக் கொலை செய்வது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. இதுவரை 30 பேர்களைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர்.

தீவிரவாதிகளின் அதிரடித் தாக்குதலில் இதுவரை 300 இற்கும் அதிகமான அமெரிக்க வீரர்கள் பலியாகிவிட்டனர். ஆனாலும் அமெரிக்கா பின் வாங்கவில்லை. மேலும் அமெரிக்கப் படையினர் ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் பாங்கர் பகுதியில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரை அதிபர் ஜோர்ஜ்புஷ் வழியனுப்பி வைத்தார். விமானத்துக்குள் அவர் ஏறிச்சென்று அந்த வீரர்களுக்கு ஓட்டோகிராபில் கையெழுதது்ப் போட்டார்.



புளோரிடாவில் தொடர்ந்து சூறாவளி அச்சுறுத்தல் நிகழும் நிலையில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் கடற்கரையிலிருந்து வெளியேறுகிறான்.

# தியாகி திலீபன் மருத்துவ சேவையினர்

# மருத்துவ வசதியற்ற இடங்களில் சேவை

(அலுவலக செய்தியாளர்)

**தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவையொட்டி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சிறப்பு மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.**

மருத்துவ வசதிகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வரும் வவுனியா வடக்கின் மூன்று முறிப்பு, மடத்து விளாங்குளம், கோயில்குஞ்சுக்குளம், நவ்வி, ஊறல்குளம், இலுப்பைக்குளம்,பனிச்சங்குளம், பாலமோட்டை, கிழவிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே மேற்படி மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா வடக்கு அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளியன்று திலீபன் மருத்துவசேவையினரால் நடத்தப்பட்ட இம் மருத்துவ முகாமில் நவீன ஆய்வு கூட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய பொது மருத்துவ சிகிச்சைகள், குழந்தை மருத்துவ சிகிச்சைகள், பற்சிகிச்சை, கண்மருத்துவ சிகிச்சை, இருதயசிகிச்சை என்பன உள்ளடங்கிய பல்வேறு சிகிச்சைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மேற்படி சிறப்பு மருத்துவ முகாமில் வைத்தியகலாநிதி சிவபாலன், வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன், வெளிநாட்டில் இருந்து வருகைதந்த வி.புஸ்பமாலா ஆகியோரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளிகளும், திலீபன் மருத்துவ சேவை மருத்துவர்களும் கலந்து சிகிச்சைகளை வழங்கினர். இம் மருத்துவ முகாமில் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 285 இற்கும் அதிகமானவர்கள் கலந்து பயன் பெற்றனர்.

இதேவேளை மேற்படி சிறப்பு மருத்துவ முகாமில் தமிழீழ சுகாதார சேவையினரும் கலந்து பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோருக்கு தொற்று நோய்களின் தாக்கம் பற்றியும், அதனைத் தடுப்பதன் அவசியம் பற்றியும் சுகாதாரக்கருத்துரைகளை வழங்கினர்.

மழை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து வசதிக் குறைபாடுகளின் மத்தியில் இச் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (லோ,தீ)



புதுக்குடியிருப்பில் அண்மையில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட பாரிய வெள்ளத்தில் சிறி.சுப்பிரமணிய வித்தியாசாலை மூழ்கியிருப்பதையும் வித்தியாசாலை மாணவர்கள் வெள்ளத்தில் படும் அவலத்தையும் படத்தில் காண்க. (படம்:-தவரட்ணம்)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி பிரிவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினரால் புளியங்குளம் ஆயப்பகுதியில் 2004 ஆம் ஆண்டு ஆடி, ஆவணி மாதங்களில் நடாத்தப்பட்ட ஆயப் பகுதி பணியாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சி நெறி நிறைவு பெற்று பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் புளியங்குளத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆயப்பகுதியின் புளியங்குளப் பகுதி மேலாளரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னிப்பகுதிக்கான சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஆணையாளர் வே.சிறிதரன், சென்ஜோன்ஸ அம்புலன்ஸ் பகுதி திட்ட இணைப்பாளர், திட்ட உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் ஆகியோரும் ஆயப்பகுதி பணிப்பாளர், பொறுப்பாளர்கள், மேலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், முதலுதவிப் பெட்டியும் வழங்கப் பட்டது.

## கல்வியில் பின் தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பைப் பிரகடனப்படுத்த முடிவு

மட்டக்களப்பு மாவட்டத்தைக் கல்வியில் பின் தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பேராசிரியர் வி.ஆர்.என். மென்டிஸ் தலைமையிலான ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு மிடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் முன்னேற்றமடைந்த மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக அனுமதி உட்பட உயர்கல்விக்கு அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் எடுக்கப் பட்ட தீர்மானத்தின்படி எதிர் வரும் 30 ஆம் திகதி பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கூடி இதற்கான அங்கீகாரத்தை வழங்கும். அதன்பின்பு இந்தத் தீர்மானம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். குறிப்பிட்ட சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், பா.அரியநேத்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, த.கனகசபை, தங்கேஸ்வரி, கதிர்காமர் மற்றும் கே.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## தனியார் மருந்தகங்கள் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் மருந்து விற்பனை வழங்குநர்களுக்கான அறிவித்தல்

(அலுவலக செய்தியாளர்)

அண்மைக்காலமாக வன்னிப் பகுதியில் இயங்கி வரும் தனியார் மருந்தகங்கள், மருத்துவ சிகிச்சை நிலையங்களில் வைத்தியர் சிபார்சுடனும், சிபார்சின்றியும், மருந்துவகைகள், விற்பனை செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் மருந்துவிற்பனை, மருத்துவம் தொடர்பான பயிற்சிகள், அனுபவங்கள் இல்லாதவர்களும் இப் பணிக்கு அமர்த்தப்படுவதனால் சிகிச்சை, மருந்து பெறவெனச் செல்லும் நோயாளர்கள் பாதிக்கப்படுவதைக் கவனத்திற் கொண்டு மருந்தகங்கள், மருத்துவ சிகிச்சை நிலையங்களில் முதன்மை மருந்து விற்பனையாளர் வழங்குநர்களுக்கு உபமருந்தாளர் பயிற்சிநெறி எம்மால் நடத்தப்பட்டு வருகின்றது. எனினும் இப்பயிற்சி நெறியில் பயிற்சியைப் பெறாத பலர் தற்பொழுதும் மருந்து விற்பனை, மருந்து வழங்கல் செயற்பாடுகளை மேற்கொள்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. எனவே இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையொன்றை விரைவில் நடாத்த இருப்பதால், இப்பரீட்சையில் தோற்றி தற்காலிக அனுமதிப் பத்திரம் பெறுமாறு தமிழீழ சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். தற்காலிக அனுமதிப்பத்திரம் இல்லாது இருப்பவர்கள் தனியார் மருந்தகங்கள், மருத்துவ சிகிச்சைநிலையங்களில் மருந்து விற்பனை வழங்குதல் செயற்பாடுகளுக்கு அனுமதிக்கப் படமாட்டார்கள். எனவே அனுமதி பெற வேண்டியவர்கள் தங்கள் சுயவிபரங்களைப் பணிப்பாளர், நடுவப்பணியகம், தமிழீழ சுகாதார சேவைகள், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பிவைப்பதோடு அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மருந்து விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கான தற்காலிக அனுமதி எனக் குறிப்பிட்டு எதிர்வரும் 05.10.2004இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ.கு)



கிளிநொச்சி பொதுச் சந்தையில் கட்டாக்காலி மாடுகள் அவ்வப்போது புகுந்து பாரிய சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. சந்தை உட்புறம் மாடொன்று நுழைந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:சோதி)

## ஆலயத்தில் தவறவிடப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைப்பு

(அலுவலக செய்தியாளர்)

உடையார்கட்டு குரவில் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தவறவிடப்பட்ட இருபதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி ஆலயத் தொண்டர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மேற்படி ஆலயத்தில் நடராசா மங்களேஸ்வரி என்பவரால் தவறவிடப்பட்ட 20,000 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை மேற்படி ஆலயத்தில் தொண்டனாகப் பணிபுரியும் உடையார் கட்டு தெற்கைச் சேர்ந்த 20 வயதுடைய நாதன் என்பவர் கண்டெடுத்து உரிமையாளரின் வீட்டுக்குக் கொண்டு சென்று அத்தங்கச் சங்கிலியைக் கையளித்துள்ளார். மேற்படி நபரின் இச்செயற்பாட்டுக்கு அப்பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (லோ.தீ)

## நெருப்புக் காய்ச்சல் தொடர்பாக புளியங்குளத்தில் விழிப்புணர்வூட்டல்

(அலுவலக செய்தியாளர்)

புளியங்குளம் பகுதியில் பரவி வரும் நெருப்புக் காய்ச்சல் நோயை தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் தமிழீழ சுகாதார சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மை நாட்களாக புளியங்குளம் பகுதியில் நெருப்புக்காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரித்ததை அடுத்தே இந் நோயை முற்றாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார சேவையினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் முதற் கட்டமாக கடந்த வெள்ளியன்று புளியங்குளம் முத்துமாரி நகர்ப்பகுதி மக்களுக்கு நெருப்புக்காய்ச்சல் நோய் தொடர்பாகவும், இது பரவுகின்ற முறைகள் பற்றியும் இதனைப் பரவாது தடுக்க வேண்டியதன் முக்கியம் பற்றியும், தடுக்கும் முறைகள் பற்றியும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது. தமிழீழ சுகாதாரசேவைகளின் பொறுப்பாளர் நாயகன் மக்களுக்கு விளக்கமளித்தார்.

இதேவேளை நெருப்புக் காய்ச்சல் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் இரவு வரை ஒலிபெருக்கிகள் மூலமாக பழையவாடி, கல்மடு நகர், புளியங்குளம் உட்பட்ட பல இடங்களிலும் நெருப்புக் காய்ச்சல் நோய் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (லோ.தீ)

## உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

(முல்லை)

ஒக்ரோபர் 06ஆம் திகதி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முல்லைக்கல்வி வலய ஆசிரியர்களுக்கிடையேயான பல போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் கடந்த 22.09.2004 அன்று ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கிடையேயான வாண்மை விருத்திப் போட்டிகளும், 21.09.2004 கட்டுரை ஓவியம், சிறுகதை, கவிதைப் போட்டிகளும் நடைபெற்றன.

24.09.2004 முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் ஆசிரியர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

வலைப்பந்து, கரப்பந்து, மெதுவான துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் அனைத்தும் 06ஆம்திகதி காலை நடைபெற உள்ளதெனவும்,உலக ஆசிரியர்தினம் முல்லை வலயத்தில், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 06.10.2004 நடைபெற உள்ளது. எனவும் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார். (08,20)

# தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆவது நினைவு நாளில்...





நல்லூரில்...





முல்லைத்தீவில்...





புதுக்குடியிருப்பில்...



வடமராட்சியில்...







தென்மராட்சியில்...


கிளிநொச்சியில்...

(படங்கள்-லோ.தீ,ச.சோ.கு,08)

# கனடா பொங்குதமிழ் நிகழ்வில்...

படங்கள்-எழில்

## கடந்த வாரத்தில்

## 16.09.2004-22.09.2004

### 16.

*. ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் நடத்தியவிமானத் தாக்குதலில்30 ஈராக்கியர்கள் பலியானதுடன் 40பேர் காயமடைந்தனர்.


விமானத் தாக்குதலால் ஏற்பட்ட பள்ளம்

*. ஆப்கானிஸ்தான் சனாதிபதி காபூலுக்கு வெளியே தேர்தல் பரப்புரைக்குச் சென்ற வேளையில் தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் அதிஷ்ரவசமாக உயிர் தப்பினார்.

**உலங்கு வானூர்தி அவசரமாகத் தரையிறங்குகிறது.**



*. சூடானில் டார்வூர் தொடர்பாக அமெரிக்கா ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ள தீர்மான வரைவிற்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ள கொபி அனான் டார்பூரில் வன்முறைகளை உடனடியாக நிறுத்துவதற்காக அத் தீர்மான வரைவை பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுள்ளார்.


கொபி அனான்

### 17.

*. ஈராக்கில் லெபனான் நாட்டைச் சேர்ந்த 3பேரையும், அவர்கள் சென்ற காரின் சாரதியையும் அமெரிக்கத் துருக்கிக் கூட்டு நிறுவனத்தில் பணியாற்றும் 10 ஊழியர்களையும் ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளதாக லெபனான் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

*. ரஷ்யாவில் 339 உயிரைப் பழிவாங்கிய பெஸ்லான் நகரப் பள்ளிச் சம்பவத்திற்குத் தாமே பொறுப்பேற்பதாக செச்சினிய தீவிரவாதக் குழுத்தலைவர் "ஷிமில் பசயேவ்" கவ்கஸ் சென்டர்காம் என்ற தீவிரவாதிகளுக்கு சொந்தமான இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

*. தென்னாபிரிக்காவில் சம்பள அதிகரிப்புக் கோரி ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தென்னாபிரிக்க வரலாற்றில் இதுவே மிகப் பெரிய வேலைநிறுத்தம் என்பது குறிப்பிடத்தக்கது.

### 18

*. நைஜீரிய வர்த்தகத் தலைநகர் லாகோசில் எரிபொருள் விநியோகக குழாய் வெடித்ததில் 30பேர் பலி.

### 19.

*. சீனாவின் மத்திய இராணுவ ஆணையகத்தின் தலைவர் ஜியாங்ஜெமின் பதவிலியிருந்து விலகியுள்ளார்.

*. ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நியூயோர்க் பயணம்.

*. நேபாள நாட்டின் 3 பாடசாலைகளிலிருந்து முந்நூற்றுக்கும் அதிகமான மாணவர்களையும் ஆசிரியர்களையும் மாவோயிட்ஸ் தீவிர வாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

*. ஈரான் உடனடியாகத் தனது யுரேனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என ஐ.நா. அணு ஆற்றல் கண்காணிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

### 20.

*. உயர் கல்வியை இலகு படுத்தும் திட்டத்திற்கமைய இந்தியா ஈடியூசேட் என்ற செயற்கைக் கோள் ஜி.எஸ்.எல்.வி-எவ் 01 என்ற ஏவு வாகனத்தின் மூலம் விண்ணுக்கு அனுப்பியது.


விண்நோக்கிப் பயணம்

*. பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பை அதிகரித்தல் தீவிரவாதத்தை ஒடுக்குதல் உட்பட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயற்பட இந்தியாவும், பிரிட்டனும் கூட்டுப் பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.

*. பாகிஸ்தான் கடல் பகுதியில் சட்ட விரோதமாக மீன் பிடித்ததாக 44 இந்திய மீனவர்களை கைது செய்ததுடன் 7 படகுகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

*. வறுமை ஒழிப்பிலும் அரசியல் பிணக்குகளைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்தாவிட்டால் அமெரிக்கா பயங்கரவாதத்திற்கெதிரான அதன் போரில் தோல்வியடைய வேண்டி ஏற்படுமென பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

*. லிபியா மீது விதிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பொருளாதாரத் தடையை நீக்குமாறு அமெரிக்க சனாதிபதி புஷ் பணிப்பு.

### 21

*. தூத்துக்குடியிலுள்ள நகராட்சிப் பள்ளியில் மின்கசிவு ஏற்பட்டதனால் பள்ளியிலுள்ள தளபாடங்கள் சேதமடைந்தன.

*. ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டம் நியூயோர்க் நகரில் ஆரம்பம்.


ஐ.நா.சபையில் சனாதிபதி புஷ் பாரியாருடன்

*. இந்தோனேசியாவில் இடம்பெற்ற தேர்தலில் முதற்கட்ட வாக்கெடுப்பில் முன்னாள் இராணுவ அதிகாரி கசிலோ பம்பாங் யுதோயோனே வெற்றி மேகவதி சுகர்னோ புத்திரி தோல்வியடைந்துள்ளார்.


சுகர்னோபுத்திரி வாக்களிப்பு

*. பயங்கரவாதத்திற்கெதிராகவும் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பெருகுவதைத் தடுக்கவும் இணைந்து செயற்பட இந்தியாவும், அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன.


மன்மோகன் சிங்-புஷ்

*. ஐ.நா பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்திற்கும் சமவுரிமை இருக்க வேண்டும் என்று நியூயோர்க்கில் ஐ.நா.பொதுச். சபைச் செயலர் கொபி அனானிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தினார்.


*. ஈராக்கிற்கு படைகளை அனுப்பி வைக்குமாறு பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் ஈராக் இடைக்கால பிரதமர் இயத் அலாவி கோரிக்கை.

### 22

*. ஹெயிட்டியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 2000 இற்கும் மேற்பட்டோர் பலியாகியதுடன் 1200இற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர்.

*. பாகிஸ்தானுக்கு 24 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று அமெரிக்க சனாதிபதி புஷ் உறுதி.

*. மேற்குப் பாக்தாத்தின் வர்த்தகப் பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 6 பேர் பலியாகியதுடன் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.


குண்டுவெடிப்பின் கோரம்

*. பொஸ்னியா- ஹேர்சிகோவினாவில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த சிறுபான்மையினரின் ஏறத்தாழ 500,000 பேர் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதாக ஐ.நா.அகதிகள் முகவர் நிறுவனப் பேச்சாளர் பீட்டர் செஸ்வர் தெரிவித்தார்.

# கார்ப் வேலைத் திட்டம் குறித்து முல்லை. அரச அதிபர் கலந்துரையாடல்

(முல்லை)

முல்லை.மாவட்டத்தில் அழிந்துள்ள பல கட்டடங்களில் சில பாடசாலை வகுப்பறை கட்டடங்கள் கார்ப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைப்பது தொடர்பான ஒப்பந்தக்காரர்களுக்கான கலந்துரையாடல் கடந்த 24ஆம் திகதி முல்லை. மாவட்ட அரச அதிபர் தலைமையில் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 16 பாடசாலை வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டு கேள்வி கோரியதன் பிரகாரம் சமுகம் அளித்திருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு நிகொட் நிறுவன முல்லை. மாவட்டப் பிரதித் திட்டப்பணிப்பாளர் ரகுநாதப்பிள்ளை செயல்முறை நடைமுறைகள் தொடர்பாக விரிவான விளக்கம் அளித்தார். அது தொடர்பான அறிக்கையும் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் அனைத்து ஒப்பந்தக்காரர்களும், முல்லை.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, நிகொட் நிறுவனப் பணிப்பாளர், பிரதிநிதிகள், கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். முல்லை.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

பெரியகுளம் பாடசாலை, சிவநகர் பாடசாலை, நெத்தலியாறு பாடசாலை, முல்லைத்தீவு இ.த.க.பாடசாலை, அனிஞ்சியன் குளம் பாடசாலை, காதலியார் சமணங்குளம் பாடசாலை, பனங்காமம், பூவரசங்குளம், ஒலுமடு தமிழ் வித்தியாலயம், கரிப்பட்ட முறிப்பு பாடசாலை, முத்து ஐயன் கட்டு அ.த.க. பாடசாலை, விநாயகபுரம் பாடசாலை, சுதந்திரபுரம் பாடசாலை, கற்சிலைமடுப் பாடசாலை, ஒதியமலைப் பாடசாலை, மல்லாவி சுகாதாரநிலையம், முல்லைத்தீவு உணவுக்களஞ்சியம் என்ற திட்டங்களே இவ்வாண்டில் நடைபெறுகின்றது. (20)

## காலபோக பயிர்ச் செய்கைக் கூட்டம்

(ஒட்டுசுட்டான்)

முத்துஜயன்கட்டுக் குளத்தின் கீழ் பயிர்செய்யும் விவசாயிகளுக்கான காலபோக பயிர்ச்செய்கைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி முல்லை மாவட்ட அரச அதிபரின் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இதில் விதைப்புத் திகதி, கால்நடைக் கட்டுப்படுத்தல் என்பனவும் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில் துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர் (05)

## தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லையில் விளையாட்டுப்போட்டிகள்

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு மாலதி விளை யாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளதால், பங்குகொள்ள விரும்பு பவர்கள் அந்தந்தப் பகுதி விளையாட்டுத்துறை அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு முல்லை. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வேழினி கேட்டுக்கொள்கின்றார்.(20)

# கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் தொடர்ந்துஅழிவு

(கண்டாவளை)

முரசுமோட்டை, பன்னங்கண்டிப் பகுதிகளில் தற்போது அறுவடை முடியாமல் இருக்கும் நெல் வயல்கள், நெற் கதிர் சூடுகள் என்பன இப்பகுதி கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் அழிவுக்குள்ளாகி வருவதையிட்டு விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

அறுவடை, சூடடிப்பு வேலைகளுக்கு கூலியாட்கள் தட்டுப்பாட்டால் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் விவசாயிகளுக்கு கால்நடைகளின் அழிவு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.நீர் பற்றாக்குறை காரணமாக முழுமையான விளைச்சல் பெற முடியாது நஷ்டம் அடைந்துள்ள விவசாயிகளுக்கு மேலும் மேலும் கால்நடைகளால் அழிவு ஏற்பட்டு வருகிறது.

கால்நடை உரிமையாளர்கள் பொறுப்பற்ற விதத்தில் கால்நடைகளைக் கட்டுப்படுத்தவில்லை என்றும் இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காததையிட்டு விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (14)

# இன்றுமொரு ஜே.ஆர். ஆக நினைக்கும் மங்கள சமரவீர

1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24ஆம் திகதி வெளியான ராவய பத்திரிகைக்குப் பேட்டியளித்த அநுரா பண்டாரநாயக்கா, "சும்மா கொண்டை கட்டிக்கொண்டு பையொன்றையும் தூக்கிக்கொண்டு ஒரு சோடி செருப்பையும் காலில் மாட்டிக் கொண்டு வருகிற மங்களசமரவீரவுக்கு அரசியல் பற்றி ஒன்றும் தெரியாது" என்று



மங்கள சமரவீர

கூறியிருந்தார்.

அவ்வாறு அரசியல் தெரியாது எனக் கூறப்பட்ட மனிதன் அநுரா கூறிய மங்களசமரவீர மட்டுமே. சிறிலங்காவில் அரசியல் என்பது என்ன? என்று கற்பித்த ஜே.ஆர் ஏற்றுக்கொண்ட சித்தாந்தமானது அன்றுபட்லர் சொன்ன "அதிகாரம், இருந்தால் ஒரு கட்சி என்பது அரசியலில் பிரதான இலக்கு என்பதாகும். அது அரசியலுக்கு இன்றியமையாத ஒன்றாகும்."

இன்று அந்த சித்தாந்தத்தைப் பாதுகாப்பவர் மங்களசமரவீர மட்டுமே. மங்கள இல்லாதிருந்தால் இன்று அரசியலும் இல்லை, கூட்டணி அரசாங்கமும் இல்லாது போயிருக்கும். 2001ஆம் ஆண்டுத்தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சி அரசின் கீழ் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி ஒருவரும் பதவி வகிக்குமிடத்து அரசியல் இல்லாமல் மறைந்து விடுமென்றே அனைவரும் எண்ணினர். அத்துடன் கூட்டாக அரசு நடத்த வேண்டியேற்படும் என்றும் கருதினர். சுருக்கமாகக் கூறினால் நாடு சுதந்திரமடைந்த பின் இரு கட்சிகளையும் பிரிக்கும் கோடு மறைந்துவிடும் நிலை காணப்பட்டது.


1956ஆம் ஆண்டு தேர்தலின் பின்னரும் மேற்கூறப்பட்ட நிலையே ஏற்பட்டது. ஒரு புறம் டட்லி சேனநாயக்கா ஐ.தே.கட்சியை விட்டு விலகியிருக்க, சேர்ஜோன் கொத்தலாவல வெளிநாட்டுப் பயணத்திற்கு ஆயத்தமானார். 1956ஆம் ஆண்டு சிறந்த தலைவர் ஒருவர் ஐ.தே.க வுக்குள் இல்லாதிருந்ததால் அவர்களுக்குள் பிளவு ஏற்பட்டு சில் எஸ்டபிள்யூ ஆர்.டிபண்டார நாயக்க வின் மக்கள் ஐக்கிய முன்னணிக்குள் இணைய பேச்சுக்கள் நடத்தினர். அப்போது ஐ.தே.கட்சிகுள் ஏற்பட்ட பிளவைத் தடுக்க உருவெடுத்தவரே ஜே.ஆர்.ஜயவர்த்தன.

2001 ஆம் ஆண்டு மங்களசமரவீரவும் அதையே செய்தார். 1956 ஆம் ஆண்டு ஜே.ஆர் நாடெங்கிலும் அரச எதிர்ப்புப் போராட்டங்களை ஏற்படுத்தினார். அதற்கு டட்லியை இணைத்துக் கொண்டார்.

2001இற்குப் பிறகு ஐ.தே.கட்சி அரசாங்கத்துக்கெதிராக மங்களசமரவீர மக்களைத் திரட்டியதுடன் சந்திரிகாவைக் கொண்டு அரசாங்கத்தைக் கலைத்து விட்டார். ஜயவர்த்தனா பண்டா- செல்வா ஒப்பந்தத்தை முன்வைத்துக் கிளர்ச்சியை ஏற்படுத்தினார். மங்களசமரவீர ரணில்- விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தத்தை முன்வைத்துக் கிளர்ச்சி செய்தார். ஜே.ஆரைப் போன்றே மங்களவுக்கும் பதவியதிகார ஆசையிருக்கிறது. 2001 இல் பொ.ஐ.முன்னணி தேர்தலில் தோல்வியைச் சந்தித்தது முதல் எப்படியாயினும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் புனரமைத்து ஆட்சியைக் கைப்பற்றுவதே அவர் நோக்கமாகியது. ஒவ்வொரு நிமிடமும் அது பற்றிய சிந்தனையிலேயே அவர் காலம் கழித்தார். அதற்காகப் பல திட்டங்களை வகுத்தார். அவையும் கை நழுவிப்போயின. என்றாலும் அவர் கைவிடவில்லை. தமக்கெதிராக ஊழல் மோசடி வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் அவர் நடவடிக்கையில் ஈடுபட்டார். பொதுவாக இவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டவர் அமைதியாக ஒதுங்கியிருப்பதே வழக்கம். எனினும் மங்கள சமரவீர ஒதுங்கியிருக்கவில்லை• தமக்கெதிராக மோசடிக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ள ஐ.தே.கட்சி அரசைக் கவிழ்ப்பதே அவரின் திட்டமாகவிருந்தது. அதே போன்று அவர் மேற்படி குற்றச்சாட்டிலிருந்து தப்பி நினைத்தவாறு ரணிலின் அரசைக் கவிழ்த்து விட்டார்.

அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் பெரும்பான்மைப்பலம் இல்லாமை ஒரு பிரச்சினையானது அதற்கு அவர் இரவு பகலாகப் போராடிப் பணியாற்றினார். ஒருமுறை பௌத்த பிக்குகளையும், ஹக்கீமையும் தொண்டமானையும் ஊடகங்களினூடாக அச்சுறுத்திப் பெரும்பான்மையைப் பெற முயன்றார். பின்னர் யாப்பின் மூலம் பெரும்பான்மையைப் பெற எத்தனித்தார். எவ்வாறேனும் அவரின் முயற்சி பலித்துவிட்டது. இன்று ஆறுமுகம் தொண்டமான் அரசுக்கு ஆதரவு வழங்க இணங்கியது. வேறு யாருக்காகவுமன்றி மங்களசமரவீரவுக்காகவே. ஹெல உறுமயவினதும் பிக்குகளினதும் சிலரின் ஆதரவைப் பெறுவதிலும் அவர் வெற்றி கண்டார். முன்னர் அவர் எப்படியாவது பெரும்பான்மையைக் காட்டுவேன் எனக் கூறியபோது அவரின் சக கட்சி உறுப்பினர்கள் நகைத்தனர்.

ஆயினும் அக்காலத்தில் ஐ.தே கட்சிக்காகப் பாடுபட்ட ஜே.ஆர், கட்சியில் முதலாவது இடத்தைப் பிடித்தார். மங்கள சமரவீர இன்னும் மூன்றாவது இடத்திலேயே இருக்கிறார்.



மகிந்த ராஜபக்ஸ



அநுரா

யானையின் சின்னத்தைக் கட்சிச் சின்னமாகக் கொண்டிருந்தமையால் கட்சிக்காக மரம் இழுக்கும் யானையாக கருதப்பட்ட ஜே.ஆரைப் போன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் மங்களசமரவீரவும் மரம் இழுத்துக் களைத்த நிலையில் காணப்படுகிறார். ஆயினும் அவர் 2001இற்குப் பின்னரும் அதற்கு முன்பும் எவ்வளவு பாடுபட்ட போதும் கட்சிக்குள் அவருக்கென ஒரு சிறப்பான பதவி கிடைக்கவில்லை. குறைந்தது கட்சியின் செயலாளராகக் கூட அவர் நியமனம் பெறவில்லை. அதாவது வழங்கப் படவில்லை. சந்திரிகா கட்சித் தலைவர் பதவியேற்ற பின்னர் இரண்டாம் இடத்தில் இருந்த ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும் 2001ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் இரண்டாம் இடத்துக்கு வரப்போராடிய மகிந்தவும், அநுராவும் மூன்றாம் இடத்தில் இருந்து இரண்டாம் இடத்துக்கு வந்ததும் மங்களசமரவீரவின் தோளில் ஏறியே- இவர்கள் மூவருக்கும் மங்களசமரவீரவுக்கும் சற்று மனக்கசப்பு இருப்பினும் மங்கள அதனைப் பெரிது படுத்தாது இருக்கின்றார்.

அன்று கொண்டை கட்டிக் கொண்டு பையொன்றையும் கையில் கொண்டு வரும் அரசியல் தெரியாத மங்கள சமரவீர என அநுரா கூறிய மனிதனின் தோளில் ஏறி அன்றி அநுராவும்-மகிந்தவும் இப்போது சனாதிபதிப் பந்தயத்தில் போட்டியிட முடியாது. இவர்களில் யார் சனாதிபதியானாலும் மங்களவின் எதிர்காலம் நிச்சயமற்றதாகும். அது மங்களவுக்கும் தெரிந்த விடயமே. ஆகவே தற்போது அவர் போடும் திட்டம் நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்கி சந்திரிகாவைப் பிரதமராக்கி விட்டால் அனைவரும் சமமான இடத்தில் அதாவது மூன்றாவது இடத்தில் இருப்பதற்காகும். அது நடக்காது விட்டால் மங்கள பூச்சியத்திற்கு சென்று விடுவாரா?

அவர் பூச்சியத்திற்குப் போனாலும் அவரின் அரசியல் நடவடிக்கை வரலாற்றில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். அது அரசியல் கட்சிகளைப் பிரிக்கும் கோட்டை அவர் வரைந்ததற்கல்ல. இரு கட்சிகள் மீதும் வெறுப்படைந்த மக்களை மீட்டு அரசியலைக் காப்பாற்றியதற்காகும். இரு கட்சிகளும் மக்களுக்குக் கசப்பானது ஜே.வி.பி என்ற வால் பிடிக்கும் கட்சியினாலாகும்.

அன்று ஜே.வி.பி பலதரப்பட்ட கோஷங்களை முன்வைத்தது.

"இவர்களும் ஒன்று அவர்களும் ஒன்று"

"நாம் இக்கட்சிகளின் வால்களாக மாட்டோம்"

"இக்கட்சிகளின் உதிரிப்பாகம் அல்ல"

"ஹொறகொல்ல வளவில் நாம் தூசு தட்டுகிறவர்கள் அல்ல"


"சிவப்புக் கொடியை வளவுகளின் திரைகளாக்கவில்லை"

"அமைச்சுப் பதவி எமக்கு வேண்டாம்"

"நாம் வந்தால் யுத்த நிறுத்த உடன் படிக்கையை எரிப்போம்"

இவ்வாறெல்லாம் கோஷமிட்டுக் கொண்டிருந்த ஜே.வி.பி.யையும் மங்கள சமரவீர பெரிய கட்சி ஒன்றின் வால் கட்சியாக மாற்றிவிட்டார். ஜே.வி.பி தனக்காகவே தைத்த இனவாத உடையை ஜே.வி.பியைக் கொண்டே கிழித்தெறிந்தார். அன்று 1960 ஆம் ஆண்டு இதே பணியை இலங்கரத்னவும் செய்தார். அப்போது இடது சாரிக்கட்சிகளின் கை மேலோங்கியிருந்தது. மக்கள் பெரும்பாலும் இருபெரும் கட்சிகளை நிராகரிக்கத் தொடங்கியிருந்தனர். 1960 தொடக்கம் 65 காலப்பகுதியிலும் 1970 தொடக்கம் 77 காலப்பகுதியிலும் இடது சாரிக்கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுடன் கூட்டணி அரசு உருவாகியது. அப்போது அக்கட்சிகளின் செல்வாக்கை மக்களிடம் இருந்து பறித்தவர் இலங்கரத்ன ஆவார்.

அன்றைய இடது சாரிகள் இலங்கரத்னவின் உதவியோடு சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அழித்து விட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டன. ஆயினும் நடந்தது, அக்கட்சிகள் இருப்பிடம் இன்றி மறைந்துவிட கட்சியின் பெயர்ப்பலகை மட்டுமே மிஞ்சியது. 1975 ஆம் ஆண்டில்



ஜே.ஆர்

சிறிலங்கா கூட்டு முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற இடது சாரிகள் தன்னைச் சுத்தமானவர்கள் என்று கூறிக்கொண்டு மக்களிடம் சென்றனர். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஏழு வருடங்களாகக் கூட்டுச் சேர்ந்த பாவத்தைப் போக்கிக் கொண்டு ஐ.தே.கட்சி பதவிக்கு வந்தால் தாம் எதிர்க்கட்சி ஸ்தானத்திற்கு வந்துவிட நினைத்தனர். அன்று ஐ.தே.கட்சிக்கு இடது சாரிகளை ஒழிக்க எடுத்த நடவடிக்கைகள் பயனற்றுப்போக அது கைகூடியமை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இலங்கரத்ன என்பவராலேயே.

ஆனால் அன்று இடது சாரிகளோடு விளையாடியது போல இன்று ஜே.வி.பியுடன் ஆட முடியாது என ஜே.வி.பியுடன் மங்கள சமரவீர பேச்சுநடத்தும் போது சிலர் கூறினர். வேறுசிலர் ஜே.வி.பிக்கு 40 இடங்கள் கிடைத்து விட்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கதை முடியப்போவதாகக் கூறினர். அன்றும் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன கணிசமான ஆசனங்களைப் பெற்றமை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. அந்த அச்சுறுத்தலை ரி.பி.இலங்கரத்ன போக்கி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உறுதிப்படுத்தினார். அதுபோன்று மங்கள சமரவீரவும் செய்வாரா? அதற்கு சந்திரிகா கூட்டணிக்கு இன்னும் சிறிது காலம் செல்ல வேண்டும். ஜே.வி.பி எந்தக் கட்சிக்கும் முட்டுக்கொடுக்காது எனக் கூறியிருப்பினும் சமரவீர அந்த முட்டுக் கொடுப்பை பெற்றுக் கொடுத்துள்ளார். இவரின் உறவினர் ஒருவருக்கும் விமல் வீரவன்சவுக்கும் இருந்த தொடர்பை இவர் பயன்படுத்தி இந்தத் தொடர்பை ஏற்படுத்தியிருக்கலாம். முதலில் அவர் நடவடிக்கை எடுத்தமையானது ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததை நிறுத்தியதாகும். அதன் பின் 1994 முதல் 2001 வரை பொ.ஐ முன்னணி செய்த பாவங்களைக் கழுவியது. அதற்கு சமரவீர ஜே.வி.பி யைச் சவர்க்காரம் ஆகப் பாவித்தார்.

அதன் பின்னர் பல கோஷங்கள் எழும்பின. "மங்கள சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அழிக்கிறார்" "ஜே.வி.பியினரிடம் காட்டிக்கொடுக்கிறார்". என்று பல குரல்கள் எழுந்தன. எனினும் மங்கள சமரவீர யார் என்பதைச் சில நீல நிறத்தவர் அறியவில்லை. ஆகவே 1994 இல் இருந்து இன்றுவரை அரசியலைக் கட்டிக்காத்தவர் என்றால் அது மங்கள சமரவீரவேதான்.

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்:-வடிவேல்



# துன்னாலை வடக்கு – புலோலி ஸ்ரீ
# தேர்த் திருவிழாச் சிறப்பி




வெண்ணெய் உண்ட கண்ணன்
மேலும் வீரம் தரவேண்டும்
எம்மை வீழ்ந்திடாது காத்து
வெற்றி அருள பிரார்த்திக்கின்றோம்.





தலைவர், பணியாளர்கள்,
அங்கத்துவசங்கங்கள்

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
பருத்தித்துறை

(சி-10464)





உங்கள் அனைத்து
அச்சுவேலைகளுக்கும்
தரமான பதிப்பகம்.

தமிழ்ப் பூங்கா மலிர் ஓப்செற் பதிப்பகம்

பிரதான வீதி, T.P:021-2264014 நெல்லியடி.
(சி-10465)





உங்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணப்
பொருட்களையும், மின்சாரப் பாவனைப் பொருட்களையும்
பெற்றிட நாடுங்கள்..

தமிழ்ப் பூங்கா புத்தகசாலை
அன் எலற்றிக்கல்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி. (சி-10466) T.P:021-2263073






ராஜன் ஆபரண மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

பிரதான வீதி, T.P:0777-290405 நெல்லியடி.
(சி-10467)

Design by :
Sri Vallipura Poto

## நாடிவருவோர்க்கெல்

அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்கு
ஓரத்திலே நர்த்தன நந்தனாக எழு
மக்கட்கெல்லாம் அருளாட்சி
மாயவிந்தைகளால் அவர்களைக்கட்டி அ
முழுப்பேற்றினையீடைய அருள் பா
வல்லிபுர மாயவனாக ஸ்ரீவல்லிபுர ஆ
ஆலயத்தில் குடிகொண்டுள்ளார். இவ் ஆ
வரலாற்றுப் பெருமைமிக்கது.
தசாப்தங்களாக வளர்ந்து செழித்து
இவ்வாலயம் இன்று பூரண பொலிவு
தெய்வீகம் கமழ்ந்து கொண்டிருக்கின்றது.

சப்த (ஏழு)தள இராஜகோபுரம்
உயர்ந்து விண்ணை முட்டி ஆலய
உயர்த்தி நிற்கிறது. அதிலுள்ள சிலை
சிற்பங்களும் தல வரலாற்றைச்
நிற்கின்றது. கோபுரதரிசனம் கோ புண்
வானுயர் கோபுரத்திற்கு உட்புறம் அ
போட்டியிட்டபடி மாபெரும் வசந்த ம
எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது. அலை
திரளும் அடியவர்கள் ஒருங்கே
மாயவனின் பூசை நிகழ்வுகளில் கலந்து
பெற அம்மண்டபம் பேருதவியாகவுள்ளது

சக்கரத்தை மூலக்கருவறையில்
தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம்
சிறப்பு இவ்வாலயத்திற்குண்டு. இதன் அ


இன்று தேரேறி வரும் கண்ணபிரான் நல்லருள்எல்லோருக்கும் கிடைத்திட



குமரகுரு புடைவை அழகுப்பொருள் வா
மாபெரும் பரிசுத்திட்டம் அறிமு

வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங் எ
இவ் அரிய வாய்ப்பை

இவ் அட்டை
ஒரு வருடகால

★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு
செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)
அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல்
மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்ப
★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ண
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள்
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வ



உ
ஸ்ரீ ராம ஜெயம்

வல்லிபுர மாயவனே!
தேரிலே வருக!
இறையருள் தருக!

# ஆ.மு. சு. மணி
## அடைவு பிடிப்பகம்

இல, 111 முதன்மைச்சாலை, கிளிநொச்சி.





பசுவதை ஒழிப்போம்! வாழ்க இடபங்கள்!
கோமாதா எங்கள் குலமாதா! வளர்க மானிடம்!
வாழ்க பசுக்கள்! மானிடரே சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!!

இன்றைய கண்ணபிரானுடைய தேர்த்தோற்சவத்தில் இருந்தாவது
பசுவதையை நிறுத்துவோம்.

(சி-10468) "எங்களிற்கு உணவு தரும் பசுவை நாம் உணவாக்குவது பாவம்"

# ... வல்லிபுரஆழ்வார் சுவாமி கோவில்

# ...பிதழ் - 27-09-2004



## ...ல்லாம் வாரி வழங்கிடும் வல்லிபுர மாயவன்

...குநீரினை
...ழுந்தருளி
...செய்து
...அவர்கள்
...பாலிக்கும்
...ஆழ்வார்
...ஆலயம்
... பல
...வரும்
...பெற்று
...து.
...ரம் ஓங்கி
...எழிலை
...லைகளும்,
...சுட்டி
...ண்ணியம்.
...அதனுடன்
...மண்டபம்
...லை எனத்
...இருந்து
...து அருள்
...ாது.
...ல் வைத்து
...என்னும்
...அமைப்பு

இந்தியாவிலுள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது. பெருமானின் தசாவதாரங்களுள் ஒன்றாகிய மச்ச அவதாரம் இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது. தலவிசேடமும், மூர்த்தி விசேடமும், விசேடமான தீர்த்தத்திற்குரிய அமைவிடமும், பொருந்தப்பெற்று மூர்த்தியும், தலமும், தீர்த்தமும், சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைஷ்ணவ சின்னங்களில் ஒன்றான திருநாமம் இத்தலத்தில் உள்ள ஒரு குளத்தில் இருந்து எடுக்கப்படுவதான சிறப்பும் இத்தலத்திற்குண்டு.

எழில் கொஞ்சும் இவ்வாலயத்திற்கு நாடி வருவோர் வாடி வதங்காமல் கோடி நன்மைகளைவாரி வழங்கிடும் ஆயர்பாடிக் கண்ணன் திருப்பாற் கடலருகே சங்கரத்தாழ்வாராக வீற்றிருந்து தன் நல்அடியார்களைக் காத்தருளுகின்றான். இவர் நமது கண்கண்ட தெய்வம்.

இவ்வாண்டு மகோற்சவம் தாரணவருடம் ஆவணி மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை (13.09.2004) அன்று கொடியேற்றத்தடன் ஆரம்பமாகி 27.9.2004 இன்று திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு நல்கும் "கீதை சொன்ன கண்ணன்" சித்திரத்தேரில் எழுந்தருளி நம்எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக.



சிறப்பிதழ் ஆக்கம்:
காரையூரான்




பாரெங்கும் கண்ணன் புகழ் பாடவேண்டும்!
செய்த பாவம் யாவும் நம்மை விட்டு நீங்க வேண்டும்!
தீப ஒளி கண்டு அருள் பொங்க வேண்டும்!

கீறோ சிறப்புப் பல்பொருள் அங்காடி
HERO SUPER COMPLEX

Dealers-Tv, Radio,V.CR, Taperecorders,
Fancy items, Stationery items,
Cassetes, Video Casstes

பிரதான வீதி.
நெல்லியடி.
(சி-10474)
Main Street, Nelliady,
Karaveddy.



கவச நாயகனாம் கண்ணனின் தேர்த்திரு நாளில்
தேசமெங்கும் இறையருள் பல்கிப் பெருகட்டும்.
- கட்டடப் பொருட்கள்
- பெயின்ற் வகைகள்
- வீட்டிற்கான சகலவகையான வர்ண மாபிள் வகைகள்
- விவசாய கிருமி நாசினிகள் தெளிகருவிகள்

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

விண்மீன் அங்காடி

பொருட்கள் தரமில்லையெனில்
விண்மீன் அங்காடியில் கூட
வாங்காதீர்கள்
பிரதான வீதி. நெல்லியடி.
T.P: 021-226 3027
(சி-10473)

...டிட பிரார்த்திக்கின்றோம்.
...ாணிப்த்தினரின்
...ழகம்




... எதிலும் இல்லாத
...ப தவற விடாதீர்கள்!
... பெறப்பட்ட நாளிலிருந்து
...லத்திற்கு செல்லுபடியாகும்.
...லா)நிறைவு செய்யப்பட்ட
...ப்படும்.
...ண்ணுடன் சேர்க்கப்படும்.
... சேர்க்கப்படமாட்டாது.
...ம்.

எமது காட்சியகம்
முற்றிலும்
குளிரூட்டப்பட்டது.

★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

...வாணிபம் யாழ்சாலை,
கிளிநொச்சி.
T.P. 021-2285971
(சி-10470)



வல்லிபுர நகரினிலே - தேரில்
வலம்வரும் நாயகனே!
எல்லையில்லாத வரமளிப்பாய்
பல தொல்லையில் இருந்து
எம்மைக் காப்பாய்.

உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்.

முத்துமாரி
நகைமாடம்

இல:-78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10471)



கோகுலத்து நாயகன் ~ எழும் கொடுந்துன்பம் தீர்ப்பான்:
இருகரம் கூப்பித் தொழுதவரின் ~
அவன் கோடியருள் தருவான்.

மருதம் வாணிபம்
நெல்லியடி ம.ம.வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி.

மருதம் ரவல்ஸ்
யாழ்-கொழும்பு மினிவான் சேவை

| யாழ் ஆசனப் பதிவு: | கையடக்க தொலைபேசி | கொழும்பு ஆசனப் பதிவு |
|---|---|---|
| 021-226 3210 | 0777-550966 | 0112-360578 |
| 021-226 3195 | 0777-550967 | 4512047 |
| 0602-212 229 | 0777-550968 | |

(சி-10472)



புல்லாங்குழல் இசைக்கும் பரந்தாமனின் அருள்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

DAIDO

சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம் TVS

உந்துருளி விற்பனையில்
முன்னனி வகிக்கும் நிறுவனம்.

உங்களின் சிறந்த
தெரிவுகளுக்கு எங்கள்
காட்சியறைக்கு வாருங்கள்

நாயகி கட்டடம், பரந்தன் சந்தி அருகாமை
யாழ்சாலை, கிளிநொச்சி.

Fiero F2
TVS Centra



(சி-10469)

# புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் கோவில்

# தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

## 27-09-2004



பெரிய
மாவடிக்குளத்தோரம்
பிராமணப்பூ
தேன்சொரிய,
உரிய
ஆலஞ்சோலையிலே
உறையும் விநாயகனே.
பிரியமுடன்
ஆட்கொண்டு
பரிந்த எம் குறைதீர்த்து
அரியவரம்தந்திடையா
ஆனைமுகா போற்றி
போற்றி.



**உலகமெலாம் உலாவிவரும் வினைதீர்க்கும் விநாயகன் விரும்பி உறைந்துள்ளபுதுக்குடியிருப்பு விநாயகர்ஆலயத்தில் கேட்போர்க்கு வரம் கொடுத்து அருள் பாலித்து ஆட் கொள்ளும் ஐந்து முகன் 27-09-2004-ஆவணித்திங்களில் தேரேறி வருகிறான் வினை தீர்க்க.**

## தலவரலாறு

இற்றைக்கு 500 ஆண்டுகட்கு மேலாக ஆலஞ்சோலையில் சிறுகுடிசையில் விநாயகர் வாழ்ந்து வந்தார்,கற்பகஅம்மையார் அருளைவியந்து கிணறு வெட்டித் திருப்பணி செய்ய அதனுள் தோன்றிய மூசிகமே இன்றும் ஆலயத்தில் உண்டு. ஆலயத்தை இடிக்க வந்த ஒல்லாந்தருக்குக் கண்கெட, விநாயகர் அருளை வியந்து திருவாசி, முகவடால் கொடுத்துச் சென்றுள்ளனர். அச்சான்றும் இன்றும் உண்டு. கற்பகத்தார் எழுதிய காணிகளும் சான்றுகளாக இருக்கின்றன.

ஆலடியில் தோன்றி அழகான கட்டடத்தில் வாழ்ந்து சித்திரத்தேரில் உலா வரும் விநாயகா! உன்னிடம் தஞ்சம் கோரிய அனைவரையும் உள்ளடக்கி ஆசித்த பெருமானே! இந்நேரம் வாழும் சமாதானத்தில் உரிமைகளைப் பெற்றுத்தர எந்நேரமும் துதிக்கின்றோம்.

**கஜமுகாசுரனை வதைத்து, தேவரை வாழவைத்தவரே! அடியார்களின் அயராத பக்தி கேட்டு அனைவருக்கும் அருள்தா!. சித்திரத் தேரேறி சித்தருக்கு வரம் கொடுக்க உத்தமாராய் உலாவரும் விநாயகா! உன் வரவை வேண்டிநிற்போர்!**

திருக்குமரன் புடைவைமாளிகை
முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு. முதன்மைச் சாலை, முல்லைத்தீவு.
(சி-10422)

துரைஉதிரிகள் வாணிபம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-10423)

பெருந் திருமகள்
ஊர்தி உதிரிகள் வாணிபம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-10424)

தெய்வம் வாணிப மாளிகை
சந்தியருகாமை, புதுக்குடியிருப்பு.
(சி-10425)

கந்தையா களஞ்சியம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-10426)

இளவரசி புடைவை மாளிகை
(விமல்ஸ்)
சந்தியருகாமை, புதுக்குடியிருப்பு.
(சி-10427)

அம்மன் நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
விரும்பும் நகைகள் 22 மாற்றுத் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
(சி-10428)

அம்மன் வணிக மாளிகை
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-10429)

பிள்ளையார் புடைவை வாணிபம்
சந்தியருகாமை, புதுக்குடியிருப்பு.
(சி-10430)

அப்பன் உதிரிகள் வாணிபம்
நெடுஞ்சாலை, புதுக்குடியிருப்பு.
(சி-10431)

மதி உணவகம்
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
(சி-10432)

பி.வி.ஆர் ஜுவலறிஸ்
22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த தொழில் வல்லுனர்களால் மனதைக் கவர்ந்த டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
பிரதான வீதி, முல்லைத்தீவு.
(சி-10433)

# புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் கோவில்
## தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்
## 27-09-2004


தேரில் ஏறிவரும் புதுக்குடியிருப்பு கணபதி
அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

**பொன்னாச்சி பதிப்பகம்**

போட்டோ பிரதி, லெமனட்டிங், கொம்பியூட்டர்
பிறின்டிங் புத்தகபையின்டிங்,
ஒப்செற் பிறின்டிங், ஸ்கிரின்பிறின்டிங்,
ஆகிய வேலைகளுக்கு நாடுங்கள்.

முல்லைச்சாலை, புதுக்குடியிருப்பு.



(சி-10434)

நம் மண்ணில் அமைதி நிலவ எழுந்துவரும் ஆனைமுகா!
நாளும் வாழ்வில் நன்மைபயக்க - தேரில் நகர்ந்து
வரும் ஆனைமுகா!

**கதீர் /அமல் /பல் மூக்குக்**
**கண்ணாடியகம்**

கண் பரிசோதித்து உடன்
கண்ணாடி வழங்குதல்

பல் கட்டுதல்
பல்கிளிப்போடுதல்

(அரசஅதிபர்
இல்லம்முன்பாக)
A.9 வீதி, கிளிநொச்சி.

கிளை: பரந்தன் வீதி,
புதுக்குடியிருப்பு.



(சி-10435)



வண்ணத்தேரேறி வீதி வலம்வரும் தொந்திகணபதியே!
நம் மக்கள் துயரறிந்து - அவர் மனம்
குளிர மனதார வேண்டுகின்றோம்.

உங்கள் வீட்டுத்தேவைகளுக்கு
அனைத்துவிதமான பொருட்களும்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**தேவி கட்டடப்பொருள்**
**உதிரிகள்-வாணிபம்**

ஒட்டுசுட்டான் சாலை,
புதுக்குடியிருப்பு.

Multilac



(சி-10436)

ஆறுமுக வேலன் அண்ணனே கணபதி – தன் அருளொடு இன்பம் அனைத்தும்
இன்றைய நன்நாளில் எல்லோர்க்கும் ஈந்திடப் பிரார்த்திக்கின்றோம்.



சுவையான, தரமான சிற்றுண்டி வகைகளையும்
சைவ, அசைவ உணவுவகைகளையும் சுத்தமாக சுகாதார முறையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே உணவகம்

**குமரன் உணவகம்**

பரந்தன்சாலை, புதுக்குடியிருப்பு.

(சி-10437)



வடபகுதி ஊர்தி உரிமையாளர்களின் எண்ணக்கனவை நனவாக்கி
வாசலிலேயே வனப்பூட்ட கிளி.நகரில் புதுப்பொலிவுடன் வருகின்றது

# தமிழீழ போக்குவரவுக் கழக ஊர்தி தூய்மிப்பகம்

## TAMILEELA TRANSPORT BOARD SERVICE STATION

*உங்கள் தேவையை நிறைவு செய்யும் எம் பணிகள்.
முற்றிலும் புதிய தொழில் நுட்ப முறையில் அறிமுகப்படுத்தப்படும்......

எம்பணியில் நீங்கள்
என்றும் மனம் மகிழ்ந்திட நாம் தருவது



## குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் விற்பனை வவுனிக்குளம்

வவுனிக்குளத்தின் குளக்கட்டிற்கு அருகாமையில் உள்ள குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வு களின் போது குடியிருந்தவர்கள் வெளியேறிச் செல்லும் போது அக்காணிகளை இங்குள்ளவர்களுக்கு விலைக்கு விற்றுச் செல்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இக்காணிகளுக்கு எக்காரணம் கொண்டும் காணி அனுமதிப்பத்திரம் வழங்க நீர்ப் பாசனத் திணைக்களம் சிபார்சு செய்ய மாட்டாதது மட்டுமல்ல, இவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்கட்கு சிபார்சு செய்யும்.

எனவே இவ்வாறான காணிகளை விலைக்கு வாங்க வேண்டாமென அறிவுறுத்துகின்றோம்.

எந்திரி. வ.தவக்குமார்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனிக்குளம்.

(சி-10212)

### மன்னாரில் பின்தங்கிய 5 கிராமங்கள் அபிவிருத்தி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள ஐந்து கிராமங்களை தெரிவு செய்து உலகவங்கியின் நிதியுதவியுடன் நிகொட் அமைப்பு பல திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

தலைமன்னார் கிழக்கு, மேற்கு, கொக்குபுடையான்,விடத்தல்தீவு, ஆண்டான்குளம் போன்ற கிராமங்களே அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. முக்கியமாக இக்கிராமங்களின் பாடசாலை நிர்மாணிப்பு வைத்திய நிலையம் கட்டிவித்தல். பொதுவான அடிப்படை வசதிகளான மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்நீர் விநியோகம், முன்பள்ளிகள் ஆகியன கட்டப்படவுள்ளன. நிதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. (மி)

## தையல் பயிற்சி நெறிக்கான நேர்முகத்தேர்வு-2004

நிதித்துறை வழங்கல் பகுதியில் தொடங்கவுள்ள தையல்பயிற்சி நெறிக்கு விண்ணபித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 29.09.2004 அன்று மு.ப.10.00 மணிக்கு இலங்கைவங்கிக்கு அருகாமை கிளிநொச்சியிலும், 30.09.2004 அன்று மு.ப. 10.00 மணிக்கு அந்திவானம் பதிப்பகம் புதுக்குடியிருப்பிலும் நடைபெற இருப்பதனால் விண்ணப்பதாரிகள் அனைவரையும் குறித்தநாளில் தவறாது சமுகமளிக்குமாறு அறியத்தருகிறோம்.

தகவல்:- ஆளுகை,
வழங்கற்பகுதி,
நிதித்துறை.

(5122)

## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

01. கல்வித்தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை :- 16 தொடக்கம் 21 வரை.

### குறிப்பு

01. வேண்டுகை முடிவு நாள் :- 05.10.2004
02. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:- 09.10.2004 காலை 9.00மணி
03. இடம் :- கிளி/மத்தியகல்லூரி. ஏ-9 வீதி, கிளிநொச்சி.
04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின் நிழற்பட படிகளையும் கொண்டு வருக.
05. பயிற்சிக் காலத்தில் 4000 ரூபா உதவிக் கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:- பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.
08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.
09. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை
மனிதவளமேம்பாட்டுப்பகுதி.

(சி-10234)

## கேள்வி அறிவித்தல்

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள கீழ் வரும் பாடசாலைகளின் ஆரம்ப வகுப்பறைக் கட்டடங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கான கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இக்ராட் தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களும் மற்றும் அந்தந்தப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் இவ் வேலையை மேற்கொள்ளத் தகுதியானவர்கள். கேள்வி கோருவோர் கீழ் வரும் அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 29.09.2004ஆம் திகதி 10.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 06.10.2004 பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே நேரத்தில் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வி தாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ விரும்பின் சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களை தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, துணுக்காய் என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

| இல | வேலை விபரம் | மீளளிக் கப்படும் வைப்புத் தொகை | மீளளிக் கப்படாத தொகை |
|---|---|---|---|
| 1 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் மு/முத்தையன்கட்டு இ.க.அ.த.க. பா. | 2500.00 | 500.00 |
| 2 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா | 2500.00 | 500.00 |
| 3 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா. | 2500.00 | 500.00 |
| 4 | ஆரம்ப வகுப்பறை திருத்தம் மு/கூழாமுறிப்பு அ.த.க.பா. | 2500.00 | 500.00 |

மா.தெய்வேந்திரம்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விப்பணிமனை,
துணுக்காய்.

(சி-10233)

## பயணியர் பேருந்துப்பணி

### வெள்ளாங்குளம் – முகமாலை

மேற்படி பேருந்துப்பணி முகமாலையில் இரவுத்தங்கல் செய்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக 01.10.2004 ஆம் நாளிலிருந்து நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

வெள்ளாங்குளம் – முகமாலை

| வெள்ளாங்குளம் | முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அ.பெ.சந்தி | கந்தபுரம் | கிளிநொச்சி | பரந்தன் | புது.கா.சந்தி | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 12.00 | 12.30 | 01.00 | 01.30 | 02.00 | 02.15 | 03.00 | 03.20 | 03.50 | 04.05 |

முகமாலை–வெள்ளாங்குளம்

| முகமாலை | புது.கா.சந்தி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அ.பெ.சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் | வெள்ளாங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.00 | 08.15 | 08.45 | 09.05 | 09-50 | 10.05 | 10.35 | 11.05 | 11.35 | 12.05 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி.10235)

# ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் ...தாபத்தைப் போக்க இதுவே தக்கதருணம்

—கில்கிறிஸ்ட்



இந்தியாவுடன் விளையாடி வெற்றிபெற அதிக போராட்டம் தேவை என்று தலைவர் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகளில் மோத அவுஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. தலைவர் பொண்டிங் சம்பியன் கோப்பைக் கிரிக்கெட்டின் போது காயமடைந்தார். இதனால் அவர் அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்கவில்லை. விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் தலைமையில் இந்திய அணியை அவுஸ்திரேலியா எதிர்கொள்ள இருக்கிறது.

கடந்த 1969- ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் நடந்த டெஸ்ட் தொடரைக் கைப்பற்றவில்லை. 2001 ஆம்ஆண்டில்ஸ்டிவ்வோ தலைமையிலான அணி இந்தச் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை அதிகப்படுத்தியது. ஆனால் லக்ஸ்ம் ஹர்பஜன், ராவிட் ஆகியோர்களின் அசத்தல் ஆட்டத்தால் அவுஸ்திரேலியாவின் கனவுதகர்ந்தது. 30- ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் இந்தப் பரிதாபத்திற்கு விடை கொடுக்க இதுவே சரியான நேரம் என்று கில்கிறிஸ்ட் நிருபர்களிடம் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்; கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த 3 டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதன் மூலம் ஆசியக் கண்டத்திலும் எங்களால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை அதிகமாகி இருக்கிறது. இந்தியாவுக்கு எதிரான இந்தப் பந்தயம் சவால் நிறைந்த ஒன்று. அணி வீரர்கள் அனைவரும் தங்கள் திறமையைச் சரியான நேரத்தில் காட்டினால் இந்தியாவை எங்களால் தோற்கடிக்க முடியும் என்றார்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சச்சின் டெண்டுல்கர் ஆடுவது 100 வீத உறுதி

கங்குலி—



நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆடுவார் என அணித்தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடைபெறும் முதல் டெஸ்டில் டெண்டுல்கர் நிச்சயமாக ஆடுவார். அவர் ஆடுவது 100 சதவீதம் உறுதியானது.

மேலும் வருகிற 30-ஆம் திகதி இந்தியா சீனியர்ஸ்- இந்தியா 'ஏ' இடையேயான பயிற்சி ஆட்டத்திலும் அவர் ஆடுவார் என்று எதிர் பார்க்கிறேன். பயிற்சி ஆட்டத்தில் டெண்டுல்கர் ஆடுவது அவருக்கும் நல்லது. அணிக்கும் நல்லது.

முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் ஆடவில்லை. இது அந்த அணிக்கு பலவீனம்தான். அதே நேரத்தில் பொண்டிங் இல்லாவிட்டாலும் சிறப்பாக ஆடக்கூடிய வீரர்கள் அந்த அணியில் உள்ளனர் எனவும் கங்குலி தெரிவித்தார்.

## சாதனை வீரர் தவறி வீழ்ந்து மரணம்

தியலும நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து கயிற்றின் மூலம் இறங்கும் சாதனை ஒன்றை ஏற்படுத்த முயன்ற தமிந்த தாப்ரூ என்ற இளைஞர் தவறி வீழ்ந்து மரணமாகியுள்ளார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் 12.55 மணியளவில் இடம் பெற்றுள்ளது. தமிந்த தாப்ரூ என்ற இந்த இளைஞர் ஏற் கனவே பம்பரகந்த மலையில் இருந்து இறங்கிச் சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். இந்த நிலையில் நிலந்த என்ற இளைஞர் தியலும நீர்வீழ்ச்சியின் உச்சியில் இருந்து ஏற்படுத்திய சாதனையை முறியடிக்கும் வகையிலேயே நேற்று முன்தினம் தமிந்த தாப்ரூ இந்த முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலையிறங்கும் நிகழ்வு இலங்கையில் விளையாட்டுத் துறையில் பதிவு செய்யப்படாத ஒன்றாகவே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (32)

## ஐ.சி.சி.கிண்ணத்தைக் கைப்பற்றியது மிகப்பெரிய சாதனையாகும் —லாறா




1979- ஆம் ஆண்டு உலக கோப்பையைக் கைப்பற்றிய பிறகு மேற்கிந்தியத் தீவு வெற்றி பெற்ற மிகப்பெரிய சம்பியன் போட்டி இதுவாகும். இது மிகப்பெரிய சாதனை வெற்றியாகும் என அணித்தலைவர் பிரைன்லாறா தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்த பிரட்ஷா-பிரவுனியை மிகவும் பாராட்டுகிறேன். மிகுந்த நெருக்கடியில் அவர்கள் விளையாடினார்கள். 1975-ஆம் ஆண்டு உலக கோப்பையில் டெரிக் முர்ரே-ஆண்டி ராபர்ட்ஸ் ஜோடி எப்படி விளையாடியதோ அதேபோல இந்த ஜோடி ஆடியது.

பிளின்டொப் ஆட்டம் இழந்தது முக்கியமானது. இதனால் இங்கிலாந்து ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடிந்தது. இங்கிலாந்துக்கு எதிராக 8 டெஸ்ட்டில் 7டெஸ்ட்டில் தோற்றிருந்தோம். இந்த வெற்றி மூலம் அந்தத் தோல்வி மறைந்துவிட்டது. இந்த வெற்றியால் ரசிகர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார்..

## வெற்றி பெறும் வாய்ப்பிருந்தும் பிரட்ஷா-பிரவுனி தடுத்து விட்டனர்

—வோன்



வெற்றி பெற எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. பிரட்ஷா-பிரவுனி ஜோடி எங்கள் வெற்றியைத் தடுத்து விட்டனர். எல்.பி.டபிள்யூ கேட்டு பல முறை கூச்சலிட்டோம் ஆனால் நடுவர் அவுட் கொடுக்காதது ஏமாற்றம் தான்.

மித வேகப்பந்து வீச்சும் வேகப்பந்து வீச்சும் எடுபட்டது. இதனால் டிரெஸ் கோதிக், கொலிங்வூட் ஆகியோருக்கு வாய்ப்புக்கொடுத்தேன். அவர்களும் அதைச் சரியாகப் பயன்படுத்தினார்கள். இதனால்தான் சுழற்பந்து வீச்சாளர்களைப் பந்து வீச அழைக்கவில்லை. 9ஆவது விக்கெட் ஜோடி சிறப்பாக ஆடி எமது வெற்றியைத் தடுத்து விட்டனர் என்றார் வோன்.

## பட்டம் வென்றார் செரீனா



பீஜிங்கில் நடைபெற்று வரும் சீன ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் சுவெடலானாவை 4-6,7-5,6-4 என்ற செற்றில் தோற்கடித்த செரீனா சம்பியன்பட்டத்தை சுவீகரித்தார்.

## உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு முன் வீரர்களுக்கு போதிய ஓய்வு அவசியம்

ஃபீபா அறிவிப்பு

உலகக் கோப்பைக் கால்பந்து போட்டியில் விளையாடும் வீரர்களுக்குப் போதுமான ஓய்வை அளிக்கும் விதமாக 2006இல் பல்வேறு போட்டிகளை முன்னதாகவே நடத்தத் தீர்மானித்துள்ளது சர்வதேச கால்பந்து சம்மேளனம் (ஃபீபா).

உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் 2006ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இதையடுத்து அந்த ஆண்டு நடைபெறவுள்ள லீக் மற்றும் போட்டிகள் அனைத்தையும் மே 14ஆம் திகதிக்குள் நடத்த அட்டவணையைத் தயார் செய்துள்ளது ஃபீபா.

மே 14 இற்குப்பிறகு 8 தினங்கள் வீரர்களுக்கு முழுவதுமாக ஓய்வு கொடுத்துவிட்டு, 23ஆம் திகதி முதல் ஜூன் 8ஆம் திகதி வரை உலகக் கோப்பைக்காக பயிற்சி ஆட்டம் உட்பட அணியைத் தயார் செய்யும படி அட்டவணையைத் தயார் செய்துள்ளது.ஃபீபா.

இதையடுத்து யுஇஃப்ஏ கோப்பை சம்பியன்ஸ் லீக் போட்டிகளும் ஒரு வாரம் முன்னதாகவே நடைபெறவுள்ளன.

அதன்படி யுஇஃப்ஏ கோப்பை இறுதி ஆட்டம் மே17ஆம திகதியும், சம்பியன்ஸ் லீக் ஆட்டம் மே24 ஆம்திகதியும் நடைபெறவுளளன.

இம் மாற்றங்களை உலகக் கால்பந்து தொழில் நுட்ப வல்லுநர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என ஃபீபா செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

2002இல் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டி, 2004 ஐரோப்பிய சம்பியன் போட்டிகளுக்கு முன்னதாக அதிகளவிலான ஆட்டங்களில் வீரர்கள் விளையாடியதால், அப் போட்டிகளில் வீரர்களின் திறமை மோசமாக இருந்ததாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து ஓய்வளிக்கும் முடிவை மேற்கொண்டுள்ளது ஃபீபா.

## 2ஆவது டெஸ்டில் ஆடுகிறார் பொண்டிங்

சம்பியன் கோப்பை கிரிகெட் போட்டிக்கான அரையிறுதியின் போது அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் தாயகம் திரும்பினார். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்தக் காயம் காரணமாக இந்தியாவுக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இருந்து பொண்டிங் நீக்கப்பட்டார். இந்நிலையில் பொண்டிங்கின் காயம் தொடர்பாக சிட்னியில் அவருக்குப் பரிசோதனை நடத்தபட்டது. இதில் அவருக்கு அறுவைச்சிகிச்சை தேவையில்லை என்று மருத்துவர்கள் கூறினர். இதனால் பொண்டிங் புதிய உற்சாகம் அடைந்துள்ளார்.

ஒருசில நாட்கள் ஓய்வுக்குப் பின்னர் அவருக்கு மீண்டும் பரிசோதனை நடக்கவுள்ளது. இதன் பின்னர் அடுத்த கட்ட விடயங்கள் முடிவு செய்யப்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். எனவே இந்தியாவுடனான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பொண்டிங் ஆடுவது உறுதியாகி விட்டது.




## உலகஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கிடையிலான வி.போட்டி

ஒக்டோபர் 06ஆம் திகதி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முல்லைக்கல்வி வலய ஆசிரியர்களுக்கிடையேயான பல போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் கடந்த 22.09.2004 அன்று ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கிடையேயான வாண்மைவிருத்திப் போட்டிகளும், 21.09.2004 கட்டுரை ஓவியம், சிறுகதை கவிதைப் போட்டிகளும் நடைபெற்றன.

24.09.2004 முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் ஆசிரியர்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன.

[illegible]லைப்பந்து, கரப்பந்து, மெது வா[illegible] துவிச்சக்கரவண்டிப் போட்டிகள் அனைத்தும் 06ஆம் திகதி காலை நடைபெற உள்ள தெனவும், உலக ஆசிரியர் தினம் முல்லை வலயத்தில், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 06.10.2004 நடைபெற உள்ளது. எனவும் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார். (08,20)

## தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப்போட்டி கிளி.ம.வி மாணவனுக்கு 4ஆவது இடம்



பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட சைக்கிள் ஓட்டப்போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் பாக்கியநாதன் சுதர்சன் (வயது18)என்பவர் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

75 கிலோ மீற்றர் கொண்ட இப்போட்டியில் மேற்படி மாணவன் 38 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடி நான்காவது இடத்தைப்பிடித்தார்.


முதலாம், இரண்டாம் இடங்களை அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்களும், மூன்றாம் இடத்தைத் தம்புள்ளவைச் சேர்ந்த மாணவனும் பெற்றுக்கொண்டனர். மேற்படி போட்டி கொழும்பில் நடைபெற்றது.

## வீரர்கள் தெரிவிற்கான மென்பந்துப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை அனுசரணையுடன், முழங்காவில் அரசியல்துறை உதவியுடன் பூநகரிப்பிரதேச விளையாட்டு அபிவிருத்திச்சங்கம் சிறந்த வீரர்களைத் தெரிவு செய்வதற்கான விலகல் முறையிலான மென்பந்துச் சுற்றுப்போட்டி ஒன்று முழங் காவில் மாவீரர் கலையரங்கு மைதா னத்தில் நடைபெற்றது.

இதில் இறுதியாட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணியை எதிர்த்து ஆடிய நாச்சிக்குடா ஜின்னா அணி வெற்றிபெற்றது.

இறுதியில் பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற்றது.



## சிந்தனைக்கு

இந்த உலகின் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-09-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com


## போட்டி வர்த்தகர்கள்!

"சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு முன்னர் அரசியல் கட்சிகளுக்கு இடையில் பொது இணக்கப்பாடு ஏற்பட வேண்டும" என்ற நிதி அமைச்சர் சரத் அமுனுகமவின் 'விருப்பானது' பொதுநோக்கில் வரவேற்கத்தக்கதே. ஏனெனில் இது, இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை இலகுவானதாக்குவதற்கும், உறுதியானதாக்குவதற்கும் மிகவும் உதவிகரமானதாக இருக்கும்.

ஆனால் சிறிலங்கா அரசியலில் இது எத்தனை தூரம் சாத்தியப்பாடானதாக முடியும் ஏனெனில், இனப்பிரச்சினை என்பது சிறிலங்கா அரசிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலானதாக இருப்பினும் அதுவே சிறிலங்கா ஆட்சி அதிகாரத்திற்காக போட்டியிடுவோரின் அரசியல் மூலதனமும் ஆகும். இதில் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுப்புச் செய்வதென்பதும் சமரசத்திற்கு வருதல் என்பதும் ஆட்சிக்கான போட்டியில் இருந்து விலகுவதாகவே அவர்களால் கொள்ளப்படுகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்பொழுது தேசிய நல்லிணக்கக் குழு ஒன்றைப் பற்றிப் பேசுகின்றார். ஆனால் அதை எதிர்க்கட்சிகள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியும் ஆட்சி அதிகாரத்திற்கான பிரதான போட்டியாளருமான ஐ.தே.கட்சியும் நிராகரித்துள்ளது.

ஆனால் இத்தகையதொரு நிலைப்பாட்டை அதாவது ஒத்துழையாமை என்ற நிலைப்பாட்டை ஐ.தே கட்சிதான் முதலில் எடுத்துள்ளது என்பதல்ல. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இது வழமையானதொன்றாகும். அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இத்தகையதொரு நிலைப்பாட்டையே கடந்த காலத்தில் எடுத்து வந்துள்ளது.

சிறிலங்கா ஆட்சியாளர்களினால் உருவாக்கப்படும் சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு, தேசிய நல்லிணக்கசபை என்பவை எல்லாம் வெளிப்பார்வைக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் கட்சிகளுடன் பொது இணக்கப்பாடு ஒன்று காண்பதற்கான நடவடிக்கை என்றே வெளிக்காட்டப்படுவதுண்டு. அதாவது பொது இணக்கப்பாடு ஒன்று காண்பதற்கான வழிமுறை என்றே கூறப்படுவதுண்டு.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவற்றை உருவாக்குதல் அன்றி அமைத்தல் என்பது அடிப்படையில் இப்பிரச்சினையை இழுத்தடித்தல் அன்றி இவ்விவகாரத்தில் காணப்படுகின்ற முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கும் நோக்கத்துடனேயே ஆகும். கடந்த கால நடவடிக்கைகள் இதனையே வெளிப்படுத்துபவையாக உள்ளன.

குறிப்பாக சர்வகட்சி மாநாடு என்பனவற்றில் பொதுவான இணக்கப்பாடு ஒன்றிற்கு வரும் அளவிற்கு சிறிலங்கா அரசியல் கட்சிகள் எவையும் சனநாயக பண்புகளோ, பாரம்பரியங்களோ கொண்டவை அல்ல இதனால் பல கட்சிகளும் குழுவாகச் சேர்ந்து ஒரு முடிவிற்கு வருதல் என்பது சாத்தியமற்றதொன்று.

சில வேளைகளில் தீர்விற்கான யோசனைகளையோ அன்றி நகல்திட்டம் ஒன்றை முன்வைத்துப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக இருப்பினும் அவற்றை உருக்குலைத்து விடுவதிலேயே சிங்களக் கட்சிகள் குறியாக உள்ளன பொ.ஐ.முன்னணி அரசாங்காத்தால் உருவாக்கப்பெற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நிலையும்அதுவாகவே இருந்தது.

இதைத்தவிர தேசிய நல்லிணக்க சபை போன்றவற்றைக் கூட்டுதல் என்பதில் அரசியல் கட்சிகளை ஒருங்குசேர இச்சபைக்குக் கூட்டிவருதல் என்பதே பெரிதும் சவால் நிறைந்ததொன்றாகும். தற்பொழுது சனாதிபதி சந்திரிகா கூட்டவுள்ள தேசிய நல்லிணக்க சபையில் பிரதான எதிர்க்கட்சிகள் பங்கு ஏற்கவில்லை என்பதை தெரியப்படுத்தியுள்ளன.

இவ்வாறாக இத்தகைய மாநாடுகள், சபைகள், கூட்டங்கள்,என்பவற்றால் இனப்பிரச்சினைக்கு ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தீர்வு காண்பது என்பது சாத்தியப்பாடானதொன்றல்ல. ஏனெனில் பிரதான இருகட்சிகளும் இனப்பிரச்சினைகளை முன்வைத்தே அரசியல் நடத்துகின்றன. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மார்க்கமாக இதனையே கடைப்பிடிக்கின்றன.

ஆகையினால் இனப்பிரச்சினைக்கு இத்தகைய சர்வகட்சிக் கூட்டங்கள், சபைகள் என்பனவற்றாலே தீர்வு காண்பது முடியாது. அவ்வாறு இல்லாவிடில் இருகட்சிகளிடையேயும் புரிந்துணர்வு ஏற்படுதல் அவசியம். அவ்வாறு இல்லாத நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காண்பது அவசியமானால், ஆட்சியிலுள்ள கட்சி உறுதியானதும் நியாயமானதுமான முடிவொன்றை எடுக்கும் பட்சத்திலேயே அது சாத்தியமானதாகும்.

ஆனால் ஆட்சி அதிகாரத்திற்காக இனப்பிரச்சினையை அரசியல் மூலதனம் ஆக்கியுள்ளவர்கள இதனை விடுத்து வெளிவருதல் என்பது மிகவும் கடினமானதொன்றே. அதாவது ஒருபொருளைப் போட்டிவர்க்கத்தில் விற்க முனையும் இரு தரப்பினர் உடன் பாட்டிற்கு வருதல் என்பது முதலுக்கு மோசமானது என்றல்லவா கருதப்படுகிறது.

# சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபின் தேசிய ஆலோசனைச் சபையில் இணையத் தயார்

## எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், சனாதிபதி முன்வைத்துள்ள தேசிய ஆலோசனைச் சபையில் இணைந்து தீவிரமாக செயற்பட தாம் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சனாதிபதி இது தொடர்பில் அனுப்பிய கடிதத்துக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனப்படி இடைக்கால முன்வரைவு தொடர்பாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து அதில் ஏதாவது முரண்பாடுகள் எழும் போதே இவ்வாறான ஆலோசனைச் சபை அவசியமாகும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ரணில் விக்கிரமசிங்க, அந்த வேளையில் குறிப்பிட்ட ஆலோசனை சபைக்கு விசேட நிபந்தனைகள் இல்லாமல் ஆதரவு வழங்கத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளைசமாதானம் தொடர்பான ஆலோசனை சபையை அமைப் பது குறித்து சனாதிபதி எதிர்வரும் 4 ஆம் திகதி அழைத்துள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்திற்கு எதிர்கட்சி கள் பல பங்கு கொள்ளாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன இதில் பங்கேற்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்கான அழைப்புகள் தற்சமயம் அனைத்துக் கட்சிகளுக்கும அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (32)

## நாங்...

கனடா தேசத்து மக்களுக்கும், கனடா அரசாங்கத்திற்கும் ஒரு உண்மையை உணர்த்தியிருக்கிறீர்கள்.

நாங்கள் அனைவரும் ஒரு தலைவரின் கீழ் ஒரு கொடியின் கீழ், ஒரு தேசத்தவர்கள் என்ற உண்மையை நீங்கள் எடுத்துச் சொல்லியுள்ளீர்கள். நாங்கள் உண்மைக்கும், நீதிக்கும், நியாயத்திற்குமாக போராடுகின்றவர்கள் என்கின்ற உண்மையை உணர்த்தியிருக்கிறீர்கள். நாங்கள் உறுதியான ஒன்றுபட்ட இனம் என்பதை வெளிப்படுத்தியுள்ளீர்கள். இந்த நிகழ்வைப் பொங்குதமிழுக்கு மட்டுமல்ல, தமிழ் இனம் பலமடைகின்ற வேளையில், உறுதியடைகின்ற வேளையில், தங்களின் உரிமைக்குரலில் ஒலிக்கின்ற போது, பலமான சக்தியாக, ஒன்று திரள்கின்ற போது, எப்போதுமே தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களும், பேரினவாதிகளும் எங்களைக் கூறுபோட்டு பிளவுபடுத்திப் பலவீனப்படுத்தவே முயன்றிருக்கிறார்கள். இதற்காகப் பகீரதப் பிரயத்தனத்தையும் செய்திருக்கிறார்கள் கனடாவில் கூட இப்பொங்கு தமிழை எங்களுடைய மக்கள் நடத்தத் தீர்மானித்த போது, பேரினவாதிகளும், தமிழ்த்தேச விரோதசக்திகளும் பெருமளவு பொருளாதாரத்தையும், பணவிரயததையும் செய்து பெருமளவு நேரத்தைச் செல வழித்தது.

இந்நிகழ்வைக் குழப்புவதற்கு பெரும் முயற்சி எடுத்தார்கள். ஆனால் அவையனைத்தையும் உடைத்தெறிந்து இச்சவால்களுக்கு முகம்கொடுத்து, தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதை நினைத்து பெருமகிழ்வு அடைகின்றோம்.

எங்களுடைய தலைவர் பெருமகிழ்வும், நிறைவும், அடைவார். எங்களுடைய மக்களும் பெருமகிழ்ச்சியும், உற்சாகமும் அடைவார்கள் என்பதில் நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அன்று பெரும் நெருக்கடிகள் மத்தியில் பெரும் எழுச்சியுடன் தொடங்கிய இந்தப்பொங்குதமிழ் நிகழ்வு தமிழீழ தேசத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஆயிரமாயிரமாக மக்கள் கூடி பெரும் எழுச்சி நிகழ்வாக இதனை மேற்கொண்டு வந்தார்கள். இன்றும் இந்த நிகழ்வு உலகளாவிய ரீதியாகப் பலநாடுகளில் மிகச் சிறப்பாக எழுச்சியாக தமிழ் மக்களுடைய உரிமைக்குரலை எழுப்புகின்ற பெரும் நிகழ்வாக இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்ணாலே பார்க்கின்றோம். கனடாவிலே நடைபெறுகின்ற இந்தப்பொங்கு தமிழ் வித்தியாசமானது, ஏனைய பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கும் இன்று கனடா வாழ் தமிழ் மக்கள் செய்கின்ற பொங்குதமிழ் நிகழ்விற்கும் பலவேறுபாடுகள் இருப்பதை நாம் காண்கின்றோம். அது குறிப்பாக ஏனைய நிகழ்வுகளைக் குழப்ப எடுத்த முயற்சிகளிலும் பார்க்க கனடாவில் நடைபெறுகின்ற இந்த பொங்கு தமிழ் நிகழ்வைக் குழப்புவதற்கு தமிழ் விரோத சக்திகளும், சிங்களப் பேரினவாத சக்திகளும் பெருமளவில் முயற்சி எடுத்தார்கள். ஆனால் அவர்களுடைய இந்த முற்சிகள் எல்லாம் பொய்த்துப் போய் எங்களுடைய மக்களின் முயற்சிக்கும், எழுச்சிக்கும் இந் நிகழ்வை ஏற்பாடு செய்த இளம் தலைமுறையினரின் ஆற்றலுக்கும், அவர்களுடைய உறுதிக்கும் ஒரு பெரிய சவாலாக இருந்தது. இவை எல்லாம் மீறி எங்களுடைய மக்கள- நீங்கள் வெற்றி கொண்டிருக்கின்றீர்கள்.

கனடா மண்ணிலே மட்டுமல்ல இங்கு சிறிலங்காவிலும், எமது தேசத்திலும் இப் பொங்கு தமிழ் சம்பந்தமாகப் பெரியளவில் பேசப்பட்டது. காரணம் சிறிலங்காவிலே சிங்கள இனவாதிகள் சிலர் பொங்கு தமிழைக் குழப்புவதற்கு வெளி நாட்டு தூதரகங்கள் முன் பயங்கரவாதிகள், பயங்கரவாதத்திற்கு நிதி சேகரிப்பதற்கு நிகழ்ச்சியை நடாத்துகிறார்கள், இதைத் தடுங்கள் என்று கூக்குரலிட்டாகள், பெரும் முயற்சி எடுத்தார்கள. ஆனால் எதுவுமே வெற்றி பெறவில்லை. எங்களுடைய மக்களின் உறுதிக்குப் பின்னால் எதுவுமே வெற்றி பெறவில்லை. எங்களுடைய மக்கள் மீது எமது தலைவர் மிக நம்பிக்கை வைத்திருக்கிறார். எங்களுடைய விடுதலைப்போராட்டம எங்களுடைய மக்களுடைய சொந்தப் பலத்திலே கட்டியெழுப்பப்பட்டது. எங்களுடைய மக்களுடைய உறுதியிலே கட்டியெழுப்பப் பட்டது. அந்த உறுதியை, அந்த மக்களுடைய ஆதரவால்தான் எங்களுடைய தலைமை இந்தளவிற்கு இப் போரட்டத்தை வெற்றி பெறச் செய்து, தமிழினத்தை இன்று தலைநிமிரச் செய்திருக்கின்றது.எங்களுக்கொரு உறுதி மிக்க, அர்ப்பணிப் புமிக்க உயர்ந்த இலட்சியத் தலைவர் கிடைத்திருக்கிறார். எங்களுடைய தமிழ் மக்களுக்கு அவருடைய காலத்தில் தமிழினம் விடுதலை பெற்று தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோருடைய எதிர்பார்ப்பும், அவாவும்.

அடிமைப்பட்டு அடிபணிந்து கிடந்த இனத்தை இன்று நிமிர வைத்து வீரம்மிக்க, உறுதிமிக்க புலிகளாகவும், மக்களாகவும் எம்மை வழிநடாத்துகின்ற ஒரு தலைவருடைய காலத்திலே நாங்கள் பிறந்திருக்கிறோம் என்பதை நினைத்து நாங்கள் பெருமகிழ்வும் நிறைவும் அடைகின்றோம். இன்று உங்கள் மத்தியிலே வந்து எங்களுடைய தலைவருடைய வாழ்த்துக்களையும் ஆசிகளையும் எடுத்துச் சொல்ல, எங்கள் கருத்துக்களை எடுத்து சொல்ல சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் எங்கள் தாயகத்திலே இருந்து உங்களோடு பேசுவதில் பெரும் மகிழ்வும் நிறைவும் அடைகின்றேன்.

உங்களுக்கு தெரியும் எத்தனையோ உயிர்விலை கொடுத்து, எவ்வளவோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, எங்களுடைய தலைவர் இந்த விடுதலைப் போராட்டத்தை வழிநடாத்தி எவ்வளவோ சவால்களை, நெருக்கடிகளை சந்தித்த போதும் அதையெல்லாம் வெற்றிப் கொண்டு எங்களுடைய விடுதலைப போராட்டத்தை வெற்றிப் பாதையில் இட்டுச்சென்று, இன்று உலக அரங்கில் நாங்கள் ஒருபலமான இனம் என்பதை, அரசியல் உரிமைக்காக விடுதலைக்காகப் போராடுகின்ற மக்கள் என்கின்ற அங்கீகாரத்தை ஏற்படுத்தியிருக்கின்றார் என்றால் எங்களுடைய தலைமைத்துவத்தின் உறுதியும் மாவீரர்களுடைய அர்ப்பணிப்பும் தான் காரணம் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

அண்மைக்காலத்திலே சமாதான சூழ்நிலைக் காலப்பகுதியிலே விடுதலைப்புலிகள் அமைப்பைப் பிளவுபடுத்திக் குலைப்பதற்கு பேரினவாதிகளும், தேச விரோத சக்திகளும் எடுத்த முயற்சிகள் எல்லாம் தோற்றுப் போய், இன்றைக்கு தோல்வியைச் சந்தித்து அவமானப் பட்டு நிற்கிறார்கள் என்பதை நீங்கள உணர்வீர்கள்.

அந்த வகையிலே கனடாவிலே வாழ்கின்ற மக்கள் அனைவரும் நாம் ஒரு உறுதியான பலமான சக்தியாக நிற்போமானால் நிச்சயமாக நாங்கள் உலக அரங்கிலே நிமிர்ந்து நிற்கக்கூடிய நிலை உருவாகும்.

கனடா மண்ணிலே நாங்கள் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருந்தாலும், அது போன்று வேறு பல நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்தாலும் அந்நாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்கள் மனங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஒரு அமைப்பு என்ற அந்த உண்மை நிலையை உணர்ந்து வருகின்றார்கள்.

அந்த வகையிலே கனடா வாழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து "நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல நாம் விடுதலைக்காகப் போராடுகின்ற ஓர் விடுதலை அமைப்பு" என்ற உண்மையை ஓங்கி ஒலிக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதுதான் எமது விருப்பம்.

நீங்கள் கனடா அரசு உட்பட உலக அரசுகளுக்கெல்லாம் ஒரு செய்தியைச் சொல்லுங்கள். நாங்கள் பயங்கர வாதிகள் அல்ல. பயங்கரவாதிகளுக்கோ, பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கோ ஊக்கமளிப்பது எமது அமைப்பின் குறிக்கோள் அல்ல. சொந்த மண்ணிலே சொந்தக் காலிலே நின்று போரிட்டு எம் உரிமைகளைப் பெறத் துடித்துக்கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் விடுதலை அமைப்பு என்ற உண்மையைச் சொல்லுங்கள்.

நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு எங்களுடைய தாயக விடுதலைக்காக, கௌரவத்திற்காக இனிவரும் தலைமுறை தலைநிமிர்ந்து வாழ உங்கள் பலத்தை வெளிப்படுத்த வேண்டும்.

கனடா நாட்டில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் எங்கள் தேசியப் பலத்தைச் சிதைத்து எங்களைப் பலவீனப்படுத்தி எங்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க எல்லோருமே முனைந்து நிற்கின்றனர்.


இந் நிகழ்வை முன்னெடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# கிளி இல். இலவச மழலைகள் கணினிப் பூங்கா அரசியல்துறைப் பொறுப்பாளரால் திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பும் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து நடாத்தும் லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினிப்பூங்கா கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் நேற்றுக் காலை 10.00 மணியாளவில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பெற்றது.

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.நளன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்



ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. இதனை இலவச மழலைகள் கணினிப் பூங்கா அமைந்துள்ள நிலத்தினை அன்பளிப்பாக வழங்கிய காந்தி அவர்களும். தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிதிப்பணிப்பாளர் ஜெயதீபன் மற்றும் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தைச் சேர்ந்த ஸ்கந்ததேவா ஆகியோரும் ஏற்றி வைக்க,தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றி வைத்தார். அடுத்து லெப். கேணல் திலீபன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். பின்னர் அகவணக்கம் இடம்பெற்றது.

அடுத்து மேஜர் முரளி இளையோர் திறன் விருத்திக்கழகப் பெயர்ப்பலகையினை தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த நரேன் திரை நீக்கம் செய்து வைத்தார். ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினிப்பூங்கா பெயர்ப்பலகையினை லண்டன் துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் கருணை லிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மழலைகள் கணினிக் கூடத்தினைச் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். அடுத்துப் பல் ஆய்வு ஊடக மண்டபத்தினை த.ரவிசங்கர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அடுத்து நிகழ்வில் கலந்து கொண்ட இரத்தினேஸ்வரக் குருக்கள் வண.பிதா தேவசகாயம் அடிகளார் ஆகியோர். வாழ்த்துரை வழங்கினர். அடுத்து லண்டனில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்துச் செய்திகளும் வாசிக்கப் பட்டன.

சிறப்புரையினைக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் நிகழ்த்தினார். அடுத்து கணினிக் கூடத்தினை நிகழ்வில் கலந்து கொண்ட மழலைகள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், நிறுவனம் சார்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## மாலைநேர....

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப் பட்டது.இந் நிகழ்வில் கேணல் சங்கர், தியாகி லெப். கேணல் திலீபன் ஆகியோருடைய திருவுருவப்படங்களுக்கு கேணல் சங்கருடைய துணைவியார் திருமதி குகா ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

இந் நிகழ்வுக்கு கிராம ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வை.குமரன் தலைமை தாங்கினார். நினைவுரையை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், பிரதிமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜெயகுலராஜா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், கிராம சேவையாளர் பாலகிருஸ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

இறுதியில் ஆறுமுகத்தான் குளமாலை நேரக் கல்வி நிலைய மாணவ மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

## சமாதானத்திற்கு....

பேச்சு வார்த்தை நடத்தத் தயார் எனச் சொல்வது போல் தென்படுகிறது. சில சமயங்களில் அவர் வேறு ஏதோ சொல்லுகின்றார்.அதாவது இறுதித் தீர்வு பற்றிய விசயமும், இந்தப் பேச்சு வார்த்தை நிகழ்ச்சி நிரலில் அடங்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். சனாதிபதியின் அறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கின்றன.

ஆனால் ஜே.வி.பியின் அறிக்கைகளோ மாறாமல் ஒரே மாதிரியாக இருக்கின்றன. புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டத்தின் அடிப்படையில் எந்த விதமான பேச்சுக்கள் நடப்பதற்கும் தாங்கள் முற்று முழுதாக எதிர்ப்புத் தெரிவிப்பதாகத் தொடர்ந்து கூறிவருகின்றனர். இந்தப் பிரச்சினையை அரசாங்கம் தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் வேறு யாரும் இதை தீர்க்கமுடியாது.

□ **கேள்வி:-**

**புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபைத் திட்டத்தின்அடிப்படையில் அரசாங்கம் பேச்சு வார்த் தைகளை ஆரம்பித்தால் ஐக்கிய தேசியக்கட்சி அதற்கு ஆதரவு வழங்குமா?**

பதில்:-

எதிர்க்கட்சியாகிய எமது கட்சி இதைத் தெளிவாகவே சொல்லி விட்டது டோக்கியோவிலும், ஒஸ்லோவிலும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பொழுது தெரிவிக்கப் பட்ட கொள்கைகளின் அடிப்படைக்கு இணங்கிய வகையில் ஒரு இடைக்கால கட்டமைப்பை உருவாக்குகின்ற நோக்கத்திலான பேச்சு வார்த்தைகளுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பைத் தருவோம் என ஏற்கனவே சொல்லி விட்டோம். அந்தக் கொள்கைகளின் அடிப்படையின் கீழ் சர்வதேச சமுகம் அமைதி நடவடிக்கைகளுக்கான ஆதரவை தொடர்ந்து தருவதற்குத் தயார் எனக் கூறிவிட்டது. எனவே அந்த கொள்கைகளின் அடிப்படையில் இடைக்காலத் தீர்வை, இடைக்கால கட்டமைப்பை நோக்கிப் பேச்சு வார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்குமானால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும். அதற்கு முதல் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சி பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க முடியாது; அரசாங்கம் தான் ஆரம்பிக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை தொடங்கி ஏதாவது முக்கிய கட்டங்கள் வருமானால் அதில் நாங்களும் கலந்து கொள்ளலாம்.

□ **கேள்வி:-**

**ஒற்றையாட்சிஎன்பது நட்ட அசையாத கல்லுப்போன்றது என்றும் ,எனவே மாற்று அரசியலமைப்பு வழிவகைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றும் நியூயோர்க்கில் சந் திரிகா கூறி இருக்கிறார் இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?**

பதில்:-

முற்று முழுதாக அதே நிலைப்பாட்டைத்தான் ஒஸ்லோ அறிக்கை பிரதி பலிக்கிறது ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஸ்ட்டித்தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று அதிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த நிலைப்பாட்டில் எமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் அதனடிப்படையில் புலிகளுடன் பேச்சு வர்த்தையைத் தொடர்வதற்கு தயாரா? இல்லையா? என்பதை சனாதிபதிதான் முடிவெடுக்க வேண்டும்.வெளியில் பேசும்போது ஒருமாதிரியாகவும், ஜே.வி.பி.யுடன் பேசுகிறபோது வேறொருமாதிரியும் இரட்டை நிலைப்பாட்டில் பேசிக் கொண்டிருக்க முடியாது. ஜே.வி. பி.க்கு பாராளுமன்றத்தில் 39 ஆசனங்கள் இருக்கின்றன ஜே.வி. பி.யின் ஆதரவின்றி அவருக்குப் பெரும்பன்மை கிடையாது. ஆகவே இது அவர்களது உட்பிச்சினை எனவே இப்பிரச்சினையை அவர்கள் தான் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றார் ஜீ.எல்.பீரிஸ்.

## பலஸ்தீன...

ரையாடியதுடன், தென்மராட்சிப்பகுதியில் உள்ள அகதி முகாம்கள், இராணுவ அதிஉயர்பாது காப்பு வலயம் என்பவற்றை நேரில் பார்வையிட்டுமுள்ளனர். (33)

## தியாகி லெப்.கேணல்....

இடம்பெற்றன.

### யாழ்ப்பாணம்

தியாகி திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம், நல்லூர் ஆலய முன்றலில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளன.

நேற்றுக்காலை தாயக நேரம் 9.00 மணிக்கு நல்லூர்க்கந்தன் ஆலயத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள தியாகி திலீபன் அவர்களின் நினைவுத்தூபியில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபன் அவர்களின் பிரமாண்டமான உருவப்படம் பாடசாலை மாணவ, மாணவிகளின் பாண்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் ஊர்வலமாக தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து வீரச்சாவடைந்தஇடத்தில், அமைக்கப்பட்டிருந்த மேடைநோக்கி எடுத்துவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆரம்பமான நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி திலீபன் அவர்கள் உண்ணா நோன்பிருந்து வீரமரணமடைந்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. நினைவுக்கல்லை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி திரைநீக்கம் செய்து வைத்தார். இதற்கான மலர் மாலையை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் என்.விமலன் அணிவித்தார்.

தொடர்ந்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் ப.பகீரதன் தலைமையில் மேடை நிகழ்வுகள்ஆரம்பமாகின. தொடர்ந்து சிறப்புரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தினார். தொடர்ந்து ஆசியுரைகளை இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் சமய மதகுருமார்களும், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் கனேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மாணவர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை தியாகி திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தென்மராட்சிக் கோட்டத்திலும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. சாவகச்சேரி நகர் மற்றும் புத்தூர்ச்சந்தி ஆகிய இடங்களில் இருந்து பாண்ட் வாத்திய, மங்கலவாத்திய இசை முழங்க தியாகி திலீபனின் உருவப்படம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபம் நோக்கி எடுத்துவரப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ். தீவகத்திற்கான சிறப்பு நிகழ்வுகள் ஊர்காவற்றுறை, புளியங்கூடல் ஸ்ரீமாரியம்மன் ஆலயத்தின் முன்றலிலும், காரைநகர் மணற்காட்டு மாரியம்மன் ஆலயமுன்றலிலும், நெடுந்தீவுப் பிரதேசசபை மண்டபத்திலும் இடம்பெற்றது.

### முல்லை

இதேபோல திலீபன் அவர்களின் இறுதிநாள் நிகழ்வு நேற்றுப் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் வணிகர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றுள்ளது. துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களிலும் நேற்றுக்காலை 9.00மணிக்கு தியாகி திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு இறுதி நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

முல்லை நகரப் பகுதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தரிலும், அளம்பில் தியாகி திலீபன் மருத்துவமனையிலும், முள்ளியவளையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், செம்மலையிலும், உடையார்கட்டு மட்டு.அம்பாறை மாவீரர் மண்டபத்திலும், வள்ளிபுனத்திலும் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன. விசுவமடுவில் மாவீரர் மண்டபத்திலும் தியாகி திலீபன் அவர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

### கிளிநொச்சி

கிளிநொச்சிப் பிரதேசத்தில் திருமுறிகண்டியிலும், தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்திலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் பரந்தன், பூநகரி, முழங்காவில், அக்கராயன், வட்டக்கச்சி,பளை ஆகிய பிரதேசங்களிலும் மேற்படி நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் கிளி.மாவட்ட வர்த்தகசங்கச் செயலர் நவரட்ணராஜா தலைமையில் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்றது.

### திருகோணமலை

தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் நேற்று திருக்கோணமலையிலும் அனுஸ்டிக்கப்பட்டது.

வீதிகள் அலங்கரிக்கப்பட்டு திலீபனின் திருவுருவப் படம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. மூதூர் கிழக்கின் பிரதான நிகழ்வு சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் 2500 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். இதில் பொதுச்சுடரினை திருக்கோணமலை மாவட்ட மருத்துவப் பிரிவுப்போராளி மண்வண்ணன் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை திருக்கோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஏற்றி வைத்தார். தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மூதூர் கிழக்கு நிர்வாகப் பொறுப்பாளர் நிலவன் மலர்மாலை அணிவித்தார்.

இதேவேளை திருக்கோணமலை மாவட்டத்துக்கான இரவு நிகழ்வு மாலை 7.00 மணிக்கு திருமலை நகரக்கடற்கரையில் தியாகிகள் நினைவு அரங்கில் நடைபெற்றது. இதில் இன்று தொடரும் சமாதான நிலவரம் தொடருமா அல்லது இடைநிறுத்தப்படுமா என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும் , சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் இன்னிசை நிகழ்வும் இடம்பெற்றன.

### மன்னார்

மன்னார் நகரில் நினைவு நிகழ்வுகள் மன்னார் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட திலீபன் நினைவு நிகழ்வு மேடையில் காலை 9.00 மணியளவில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் தி.சின்னத்துரை தலைமையில் ஆரம்பமாகின. தேசியக் கொடியை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் வரதன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை மன்னார் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் கிருஸ்ணராம் அவர்கள் ஏற்றினார். திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச்சேர்ந்த டொஜிகுரூஸ் அவர்கள் அணிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்புரைகள், நினைவுரைகள் என்பன இடம்பெற்றன.

### மட்டக்களப்பு, அம்பாறை

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் கரடியனாறு எனும் இடத்தில் குடும்பிமலைக் கோட்டப் பொறுப்பாளர் புகழன் தலைமையில் இடம்பெற்ற தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதி ராம் தேசியக்கொடியை ஏற்றிவைக்க தளபதி பிரபா, மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சசிமதி, மட்டு-அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் பிரத்தியேகமான முகாமொன்றில் சிறப்புற நடைபெற்றுள்ளன.

முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணித்துணைத் தளபதி லெப்.கேணல் பல்லவன் ஏற்றி வைக்க, தேசியக்கொடியினை தளபதி கேணல் பானு ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினைக் குட்டிசிறி மோட்டார் படையணியின் கட்டளைத் தளபதிகளான கஜன், அருள்நேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை ஜெயந்தன் படையணித் தளபதிகளில் ஒருவரான கோணேஸ் அணிவித்தார்.

மகளிர் படையணியைச் சேர்ந்த வசந்தா மலரஞ்சலியை ஆரம்பித்து வைக்கத் தொடர்ந்து போராளிகள் மலரஞ்சலி செலுத்தினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதிகளில் ஒருவரான மிரேஸ்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் குட்டிசிறி மோட்டார் படையணித்தளபதிகளில் ஒருவரும் மூத்த உறுப்பினருமான மிரேஸ், மற்றும் கஜன், அருள்நேசன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த காந்தரூபன், மகளிர் படையணியைச் சேர்ந்த வசந்தா ஆகியோரின் நினைவுரைகளுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(லோ,தீ,ச,சோ,கு,20,08,24,09,33,27,மி,32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.